Registered as a Newspaper பக்கங்கள்: 12 விலை ரூபா 6·00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆனி 24 | 08-07-94 | வெள்ளிக்கிழமை | ஓசை 140

### அடகுக் கடன் தொழிற்பாடு தமிழீழ வைப்பகத்தில் ஆரம்பம்

தமிழீழ மக்களின் நலன் கருதிய ''அடகுக் கடன்'' தொழிற்பாடுகளை, ஏலவே உறுதியுரைத்தபடி ''தமிழீழ வைப்பகம்'' 1994 யூலை 06ஆம் நாளன்று தொடங்கியுள்ளது. மக்களின் தாங்குவலுவுக்குட்பட்ட இரண்டரை எளிய மாத வட்டிமட்டுமே அறவிடப்படுவதும், தமது தொழில் மற்றும் திடீர்த் தேவைகளின்போது ''அடகுக் கடன்'' வாய்ப்பின்றித் துன்பப்படுவோருக்குத் துணையாக இத்திட்டம் (11 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச குழு தேவையில்லை!

## கடந்தகாலச் செயற்பாடுகள் திருப்தியில்லை என்கிறார் சந்திரிகா

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலை மேற்பார்வை செய்ய சர்வதேச கண்காணிப்புக் குழு ஒன்றிற்கு அழைப்புவிடும் நோக்கம் தமக்கு இல்லை என மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார். இதற்கு கடந்தகாலத் தேர்தல்களின் போது சர்வதேச கண்காணிப்புக் குழு திறம்படச் செயற்படாமையே காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்படி கருத்தை அவர் தெரிவித்துள்ளார்- சர்வதேச கண்காணிப்புக் குழு ஒன்று வந்து தேர்தலை எவ்வாறு அவதானிக்க முடியும் என்றும் இது ஒரு போதும் சாதகமாக அமையாது என்றும் தெரிவித்ததோடு, இதுவரை ஊழல் நடைபெற்ற தேர்தல்சகலவற்றிலும் மிகவும் நன்றாக தேர்தல் நடைபெற்றதாகவே சர்வதேசக் குழுவின் அறிக்கைகளில் இருந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்-

ஜே.வி.பி தலைவர்களில் ஒருவரான சோமவன்ச அமரசேகரா இலங்கை வருவதற்கும் தேர்தலில் போட்டியிடவும் செய்கின்ற முயற்சிகள் அரசாங்கத்தின் திட்டமிட்ட ஒரு நடவடிக்கை என தெரிவித்த அவர் அரசாங்கத் (11 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கடற்பரப்பில் மேலும் ஒரு மீனவர் கைது

(வடமராட்சி)

வடமராட்சிக் கடலில் அப்பாவி மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யும் படலம் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

வல்வெட்டித்துறை கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த நான்கு மீனவர்களில் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டார். மற்றைய மூன்று பேரும் கடலில் குதித்து அதிக நேரத்திற்குப் பின்னர் கரைக்கு வந்து சேர்ந்தனர்.

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த வரதராசா இராசரத்தினம் (வயது 23) என்ற இளம் மீனவரே இவ்வாறு நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் கைது செய்யப்பட்டவராவார். (யோ)

## ஷெல்லை குத்திப் பார்த்த சிறுவன் விரலை இழந்தார்

(யாழ்ப்பாணம்)

வயலில் கிடந்த எறிகணையை குத்திப்பார்த்த சிறுவன் ஒருவர் தனது விரல் ஒன்றை இழந்த நிகழ்வு ஒன்று நேற்று ஆனைக்கோட்டைப் பகுதியில் நடந்துள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: வயல் பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த மூன்று சிறுவர்கள் கண்டெடுத்த எறிகணை ஒன்றினை கழற்றிய பின் கல்லில் குத்திப் பார்த்துள்ளனர்.

இதன்போது செல்லத்துரை இளையராஜா (வயது 12) எனபவர் கையில் பலத்த (11ஆம் பக்சம் பார்க்க)

## கப்பல் நோயாளிகள் மீது காங்கேசனில் சோதனை

(வடமராட்சி)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் நோயாளிகளை திருகோணமலை துறைமுகத்தில இருந்து ஏற்றி வந்த 'பிளம்பயோன்' கப்பல் காங்கேசன்துறையில் கடற்படையினரால் நீண்ட நேரம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இக்கப்பல் நேற்று காலை 5 மணியளவில் நேரே காங்கேசன்துறைக்குச் சென்று சோதனை செய்யப்பட்ட பின்னர் பகல் 12.30 மணியளவில் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

(11ஆம் பக்கம் பார்க்க)

## தென்னிந்திய திருச்சபையின் கொழும்பு காரியாலயத்தில் தீவிர சோதனைநடவடிக்கை

(கொழும்பு)

தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீனத்தின் கீழ் இயங்கும் கொழும்பு ஆதீன காரியாலயமும் ஆதீனக் குரு திரு. ஜெபநேசனின் வீடும் சிறிலங்கா பொலிசாரின் பலத்த சோதனைக்கு உள்ளாக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வெள்ளவத்தையில் அமைந் (11 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் காலத்தில் வடக்கிலிருந்து தெற்கே தமிழர் செல்ல தடை வரும்?

(கொழும்பு)

தேர்தல் காலத்தில் வடபகுதியிலிருந்து சிறிலங்காவிற்கு தமிழர்கள் செல்வதை தற்காலிகமாக தடை செய்வது குறித்து சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாக கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இக்காலப்பகுதியில்வவுனியாவிற்கும் கொழும்பிற்கும் இடையிலான புகையிரத சேவையினை தற்காலிகமாக நிறுத்துவது தொடர்பாகவும் ஆராயப்படுவதாகவும் இத (11 ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதியில் தாக்குதல் நடத்த பாதுகாப்பு அமைச்சு முடிவு

(கொழும்பு)

வடக்கில் உடன் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதெனவும் தற்போது இடம்பெற்றுவரும் நடவடிக்கைகள் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும் எனவும் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது முடிவு செய்யப்பட்டதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

அண்மையில் நடந்த பாதுகாப்பு அமைச்சு மாநாட்டில் இவ்வாறு முடிவெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கை தொடர்பாக அவதானமாக இருக்குமாறும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையை விரிவுபடுத்தி முழுமைப்படுத்துமாறு பாதுகாப்பு பிரிவுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதே வேளை சென்ற வாரம் இராணுவத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெரி டி சில்வா உட்பட மூ (11 ஆம் பக்கம் பார்க்க)

## சுயேட்சைக் குழு நியமனப்பத்திரம்

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்திற்கான நியமனப் பத்திரத்தை நேற்று முஸ்லிம் காங்கிரஸ் தாக்கல் செய்தது. மேலும் இரு சுயேட்சைக் குழுக்கள் யாழ். மாவட்டத்திற்கு தமது நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதி செயலாளரை பதவி விலக வற்புறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதியின் செயலாளர் கே.எச்.ஜே விஜேதாச இன்னும் சில தினங்களில் அப்பதவியிலிருந்து விலகி வெளிநாட்டு சேவைகள் தொடர்பான புதிய ஒரு பதவியை ஏற்கவிருப்பதாக ஜனாதிபதி மாளிகை வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை ஜனாதிபதியின் ஆலோசகரும் திட்ட அமுலாக்கல அமைச்சின் செயலாளருமான கலாநிதி விக்கிரமவீரசூரிய, விஜேதாசவின் பதவிக்கு நியமிக்கப்பட இருப்பதாக மேலும் ஜனாதி (11 ஆம் பக்கம் பார்க்க)

## வருமானம்குறைந்தவருக்கு வாராந்த உணவுப் பொருள்

### சு. க. எம். பி. கூறுகிறார்

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தினருக்கு வாராந்தம் உணவு பொருட்கள் உட்பட அத்தியாவசிய பொருட்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த சுதந்திரக் கட்சி தயாராக இருப்பதாக அதன் உப தலைவர் ரிச்சட் பத்திரான தெரிவித்துள்ளார்.

'லக்திவ' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்;

வாராந்தம் வழங்கப்படும் இலவச உணவு பொருட்களில் அரிசி, மா, பருப்பு குழந்தைகளுக்கான பால் மா, சீனி ஆகியன வழங்கப்பட இருப்பதாகவும் இலவசமாக மண் (11 ஆம் பச்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

புரியாணி வகைகள் மற்றும் நூடில்ஸ், சுவீற்ஸ் வகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்கள் நேரில் வரவும். சம்பளம் திறமைக்கேற்ப வழங்கப்படும். ஹொட்டல் றொலெக்ஸ். 340 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம், (8719)

## தவறிவிட்டது

சரவணமுத்து காமாட்சி, சரவணமுத்து சந்திரமலர் ஆகிய இருவரினதும் அடையாள அட்டைகள் சென்ற 27ஆம் திகதியன்று பருத்தித்துறையில் தவறிவிட்டன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்ப்படி முகவரிக்கு அல்லது மாவிசந்தி காவல் பணிமனைக்கு அனுப்பிவைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. சரவணமுத்து போதரமடம், துன்னாலை வடக்கு, கரவெட்டி. (8743)

## வாய்மொழி பரீட்சை

1991, 1992, 1993 ஆண்டுகளில் ஆங்கில தேசிய கல்வித் தராதரப்பத்திரம் அறிமுறைப் பரீட்சைக்குத் தோற்றி ஒவ்வொரு பகுதியிலும் 40 புள்ளிகட்கு மேல் பெற்ற பரீட்சார்த்திகள் எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம், வலயம் 1-ல் பதிவு செய்தல் வேண்டும்.

பதிவு செய்ய வரும்போது அடையாள அட்டை, பெறுபேற்றுப் புள்ளித்தாள் முதலியன காண்பிக்கப்பட வேண்டும்.

இதற்கான வாய்மொழிப் பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி யா/யாழ் இந்துக் கல்லூரியில் காலை 9.00 மணி முதல் இடம் பெறும் எனக்கல்விப் பணிப்பாளர் வலயம் -1 செல்வி திலகவதி பெரியதம்பி அறிவிக்கின்றார்.

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு

நீல நிற யமகா [மேற் (50)] மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

**V. K. நற்குணம்**
**ப. தெ. வ. அ. கூ. சங்கம்**
**டச்சு வீதி,**
**சாவகச்சேரி.**

(8742)

யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க

## பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 10-07-1994 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3மணிக்கு மருதனார் மடத்தில் இயங்கும் யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளதால் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**செயலாளர்**

(8740)

# 7-ம் ஆண்டு நினைவஞ்சலி




**வீரவேங்கை வசந்தன்**

**காசிப்பிள்ளை உதயகுமார்**

பிறப்பு:- 29-01-67 வீரச்சாவு:- 08-07-87

திதி:- 20-06-94

விடியலின் பாதையில்
உதித்த உதயனே - நீ
உதிர்ந்து ஏழாண்டு ஆனாலும்
ஆறாது உன் வசந்த நினைவு
செங்களம் பல ஆடி
தாயகக் கனவுடன் தொண்டமனாற்றில்
சாவினைத் தழுவினாயோ
உயிர் விடும் வேளையில்
உன் வாயது உரைத்தது
தமிழீழம்
உதித்து விடு மீண்டும் உதயனே
சுதந்திர தமிழீழம் தனைக் காண -

கோப்பாய் வடக்கு

பிரிவால் ஏங்கும்
உன் குடும்பத்தினர்.

(8727)

# 3-ம் ஆண்டு திதி அனுட்டிப்பு நாள்



**கப்டன் லீமா**

**(இராசேந்திரம் கௌரி)**

| மண்ணில் | மண்ணிற்காக |
|---|---|
| 16-09-1971 | 11-07-1991 |

ஓடையிலே மலர்ந்த தமிழ்
றோஜாவே நீ எழுந்து,
மேடையிலே சுதந்திரம் ஏன்
வேண்டாம் எமக்கு என்று
பாடையிலே பல தடவை
பவனி செல்வதில்லையென்று
தேடையிலே உனைப்பிரிந்த
தேசமிங்கே அழுகுதம்மா.

8-07-1994 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் திதி வைபவத்தில் அனைத்துப் போராளிகளையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம் அத்தோடு 11-07-91ல் இவருடன் ஆனையிறவுச் சமரில் வீரச்சாவடைந்த சக போராளிகளுக்கும் எமது அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

லீமா வீதி,
இந்திர அம்மன் கோவிலடி
துன்னாலை, கரவெட்டி

-குடும்பத்தினர்

(8714)

# நினைவு கூருகின்றோம்...

## 08. 07. 1994

1987-ம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய,

★ **சிறி** (சீவரத்தினம் கிருஷ்ணதாஸ்-30 ஏக்கர்-திருமலை)

தொண்டமானாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**வசந்தன்** (காசிப்பிள்ளை உதயகுமார்-நாவற்கட்டை. கோப்பாய்-யாழ்)

பெலவத்தை சிறிலங்கா இராணுவ தடுப்பு முகாமில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட மாணவன் உட்பட 02 தமிழர்கள்.

மன்னார்-அடம்பன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட கர்ப்பிணிப்பெண், கணவர், 7 வயது மகன், மூதாட்டி ஆகிய 04 தமிழர்கள்.

யாழ்-கரவெட்டியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

1988-ம் ஆண்டு கிளி-பரந்தன், நவஜீவனம் அருகில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1989-ம் ஆண்டு யாழ்-நல்லூர்ப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.நிக்சன்** (ஞானப்பிரகாசம் நிஷாந்தன்-சுண்டுக்குளி-யாழ்)

**அன்பு** (அம்பிகைபாலன் அன்பழகன்-அன்பழகன்வீதி, நாயன்மார்க்கட்டு-யாழ்)

1990-ம் ஆண்டு மட்டுநகரில் எரிந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட 08 தமிழர்கள்,

திருமலையில் வேலைக்குச் சென்று காணாமற்போன புன்னைச்சோலை காளிகோயில் வீதியைச் சேர்ந்த தமிழிளைஞன்

திருமலை-கட்டைபறிச்சான், தோப்பூர், பள்ளிக்குடியிருப்புக் காடுகளில் சிறிலங்காப்படையினரால் வெட்டிக்கொல்லப்பட்ட பல தமிழர்கள்.

1992-ம் ஆண்டு மட்டு - கரடியனாறுப்பகுதியில் ஊர்காவற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஒரு தமிழர்.


கொழும்பிலிருந்து அத்தியாவசியப் பொருட்களுடன் யாழ்நோக்கி வந்துகொண்டிருந்த வேலணை ப.நோ.கூ.சங்க லொறி மீது சிறிலங்கா இராணுவத்தினரால் ஏவப்பட்ட எறிகணைவீச்சில் பலியான சாரதி

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

(சி-9768) **தமிழீழ விடுதலைப் புலிகள்**

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**மேஜர் யாசீர்**

**(கந்தசாமி சிவதாஸ்)**

**தாயின்மடியில்: 03-7-70 தாயக மண்ணில்: 16-7-91**

**திதி: 8 - 07 - 94**

சதீஸ் வீதி,
உசன், மிருசுவில்,

**கந்தசாமி குடும்பத்தினர்**

(8733)

# மறைந்தும் மறையாத பொதுவுடமையாளர்களும் கலைந்தும் கலையாத சோவியத் சாம்ராச்சியமும்

பாலகுமாரன்

இந்த நூற்றாண்டின் அதி முக்கியநிகழ்வான சோவியத் சாமிராச்சியவீழ்ச்சி 1991ஆம் ஆண்டு நிகழ்ந்தமையை எவரும் எளிதில்மறந்துவிட முடியாது. 1991-ம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று மிக்கேல் கோர்ப்பச்சேவ் பதவி விலகினார். மறுநாளே 1922-ம் ஆண்டின் புகழ் மிக்க (சோவியத்) ஒன்றிய உடன்பாடு (Treaty of Union) இல்லாது போயிற்று. அப்போது அதற்குப் பதிலாக 15சுதந்திரமானதனி நாடுகள் தோற்றம் பெற்றன. இவற்றில் 1940-ம் ஆண்டளவில் சோவியத்தோடு இணைக்கப்பட்ட மூன்று போல்டிக் பகுதிக் குடியரசுகளான எஸ்தோனியா, லிதுவேனியா, லத்வியா ஆகியவை 1991-ம் ஆண்டு செப்டம்பர் மாதமே தமது சுதந்திரத்தை அறிவித்து விட்டன. பின்னர் ஜோர்ஜியா தவிர்ந்தவை CIS எனப்படும் ஒரு நெகிழ்வான கூட்டமைப்பான சுதந்திர நாடுகளின் பொதுநலவாயம் (Common Wealth of Independent Nations) என்று ஒன்றை ருஷ்யாவோடு ஏற்படுத்தின. இது முன்னைய இரண்டாண்டு வரலாறு. ஆனால் இன்றைய வரலாறு எப்படியிருக்கின்றது?

## முன்னைய குடியரசுகளில் ருஷ்யப் படைகள்

இப்போதும் நிலைமைகள் தெளிவடையவில்லை. குழப்பங்கள் தீரவில்லை; முன்னைய சோவியத் ஒன்றியத்தின் சீர்குலைவு முற்றுப் பெற்றதாக இல்லை. வேறு முறைமைகளில் அது உயிர் பெறுவதாக தெரிகின்றது; கட்டற்ற சந்தைப் பொருண்மிய ஒழுங்கை நோக்கிய நகர்வு சுமுகமாகவோ, சீராகவோ அமையவில்லை; அது போலவே கிழக்கே விளாடி வெஸ்ரொக்கிலிருந்து மேற்கே கலினின் கிராட் வரை பரந்து உலகின் மொத்த நிலப்பரப்பில் 11.5 விழுக்காட்டை தன்னுள் அடக்கியுள்ள ருஷ்யா தனது பழைய சாமிராச்சிய விரிவாக்கத்தை மறக்கவில்லை; அதன் தலைவர்களான யெல்ட்சினோ அல்லது தற்போது புதிதாகதோற்றம் பெற்றுள்ளதீவிரருஷ்ய தேசியவாதத்தினை பின்பற்றும் விளாடிமிர் சிரினோவ்ஸ்கியோ (Vladimir Zhirinovsky) அல்லதுஇப்போதும் பொது உடமை வழியைப் பின்பற்றும் முன்னைய உபசனாதிபதி அலெக்சாண்டர் ருட்ஸ்கோயோ (Rutskoi) இவ் விடயத்தில் மட்டும் ஒரே கருத்தையே கொண்டிருக்கிறார்கள. ருட்ஸ்கோய் கூறுகிறார்-''சோவியத் யூனியன் என்பது ருஷ்யாவே''. 1917-ம் ஆண்டு ருஷ்ய தேசத்தைப் பாருங்கள் இப்போது தம்மை சுதந்திர நாடுகளாக கூறிக் கொள்பவை என்றும் வரலாற்றில் சுதந்திர நாடுகளாக இருந்தது கிடையாது. எப்போதுமே அவர்கள் ருஷ்யாவின் ஒரு பகுதியாகவே இருந்துள்ளார்கள். ''ருஷ்யா என்றால் அது ஒருமாபெரும்சக்தியல்லவா?'' என்கிறார். இவையெல்லாம் வெறும் வார்த்தைகளாக எண்ணிவிட முடியாது. ருஷ்யப் படைகள் இன்னமும் பல முன்னைய குடியரசுகளில் தரித்து நிற்பதோடு அங்கு தமது மேலாண்மையைக் காட்டி வருகின்றன. பால்டிக் கடலிலிருந்து மத்திய ஆசியா வரை பரந்துள்ள தனது முன்னைய எல்லைகளை மனதிலிருத்தியே அவை செயற்படுகின்றன. இவற்றிற்கு எல்லாம் அடிப்படையாக அமைவது இன்று ருஷ்யாவிற்கு வெளியே 25 மிலியன் ருஷ்ய இனத்தவர் ஏனைய அயல் பகுதிகளிலேயே வாழ்வது தான். ஏனென்றால் சோவியத்தின் வரலாற்றில் தாயகப் பகுதியிலிருந்து ஏனைய பகுதிகட்கு ருஷ்யர் தொடர்ந்து புலம் பெயர்ந்தமை நடந்துள்ளது. 'ருஷ்யாவின் வரலாறு என்பது தன்னைத் தானே குடியேற்றம் செய்த ஒருநாட்டின் வரலாறு' என வரலாற்றாளர் குறிப்பிடுவர். எனவே 70 ஆண்டுகட்கு மேலாக சோவியத்தின் கீழிருந்து இப்போது பிரிந்து தனிநாடாக மாறியோர் தம்மை ருஷ்யாவிலிருந்து முற்றாகத் துண்டிக்க முடியாமல் பொருண்மிய காரணங்களுக்காக தவிப்பதையும் - துண்டிக்க விடாமல் ருஷ்யா தனது இன வழி மக்களின் நலன்களைக் காரணமாகப் பயன்படுத்துவதையும் இப்போது கண்முன்னே காணும் காட்சியாகி விட்டது.

## முன்னைய குடியரசுகளில் ருஷ்யர்களின் நிலை

ஒரு சில புள்ளி விபரங்களைப் பார்த்தாலே நிலைமைகளின் தீவிரம் புரியும். இன்று மோல்டோவா, கசாக்கித்தான், லட்வியா, எஸ்தோனியா, உக்ரேன் எனப் பல நாடுகளில் சிறுபான்மையாகவுள்ள ருஷ்ய மக்கள் நிலை கேள்விக்குறியாகி விட்டது. எஸ்தோனியாவில் 30 விழுக்காடு, லட்வியாவில் 34விழுக்காடு, உக்ரேனில் 22 விழுக்காடு, கசாக்கித்தானில் 38 விழுக்காடு என ருஷ்ய மக்களின் குடித்தொகையளவு அமைந்துள்ளது. இன்று இங்கெல்லாம் ருஷ்ய மக்கள் புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளின் பெரும்பான்மையினரால் புறக்கணிக்கப்பட்டும் இவர்கள் ருஷ்யாவின் தலையீட்டிற்குவழிவகுக்கப்போகும் பகடைகள் எனப் பார்க்கப்படுவதாலும் நிலைமைகள் வெகுவேகமாக மோசமடைகின்றன. இவைகாரணமாக ஏற்கனவே 30 லட்சம் ருஷ்யமக்கள் வாழ முடியாத நிலையில் ருஷ்யா வந்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

இப்போது என்னவென்றால் தான் தலையிட்ட நாடுகளில் உள்ள அமெரிக்கரைக் காப்பாற்றப் போவதாகக் கூறி அமெரிக்கா முன்னர் படைகளை வெளிநாடுகட்கு அனுப்பியதுபோல் அல்லது கிரனடாவில தலையிட்டது போல் ருஷ்யாவும் தலையிட வாய்ப்பு உருவாகி விட்டதாகக் கூறப்படுகின்றது. லட்வியாவைப் பார்த்தாலே நிலைமைகள் விளங்கும். இங்குள்ள 3 மில்லியனுக்கும் சற்று குறைவான குடித்தொகையில் ஏறத்தாழ ஒரு மில்லியன் ருஷ்ய மக்களே. இவர்களில் பெரும்பான்மையோர் லட்வியா முன்னர் சோவியத்திலிருந்து சுதந்திரம் பெறுவதை விரும்பாமல் எதிர்த்து வாக்களித்தவர்கள். எனவே இப்போது லட்வியா இவர்கள் மீதுமிகக் கடுமையாகப்பழி வாங்குகின்றது. ஏழு லட்சம் பேர் இன்று குடியுரிமையற்ற மக்களா - ஒரு இலட்சம் தொகை கொண்ட மக்கள் கறுப்புப் புள்ளியிடப்பட்ட கடவுச் சீட்டுகளைக் கொண்டவர்களாக அதாவது வேலை வாய்ப்பு, வதிவிட வசதிகள் போன்றவற்றைப் பெற சட்டரீதியான உரித்தற்றவராக மாற்றப்பட்டு விட்டனர். இம்மக்களை 'இறந்தவர்கள் போல்' கணிப்பதாக ருஷ்யா லட்வியாவை குற்றம் சாட்டுகின்றது.

இதுபோலவே முன்னர் மத்திய ஆசியப் பகுதி இசுலாமிய குடியரசுகளில் குடியேறிய ருஷ்ய இனத்தவர் தம்மை அவ்வப் பகுதி மக்களைவிட உயர்ந்தவர்களாக கருதி நடந்து கொண்டனர். ஆனால் இன்றோ நிலை மாறிவிட்டது. கசாக்கித்தானில் 37 விழுக்காடு ருஷ்ய மக்களும் இப்போது தாம் அவமதிக்கப்படுவதாக உணருகின்றனர். கடையில் பொருள் வாங்கச் சென்றால் கூட முதலில் கசாக் மக்களுக்கே முன்னுரிமை என்ற நிலை ஏனென்று கேட்டால் 'இதுஎனது நாடு' என கசாக்கித்தானியாா கூறுவதாக இப்பகுதி ருஷ்யத்தலைவர் குறைபட்டார். இவ்வாறாகவே நிலைமை எல்லா இடங்களிலும் உள்ளது. இவை எல்லாவற்றையும் விட மிக மோசமான முறுகல் நிலை கிறைமியாவில் உள்ளது. 1954-ம் ஆண்டு இச் சிறிய குடாநாட்டை உக்ரேனுக்கு குருஷ்சேவ் நல்லெண்ணம்காரணமாகவழங்கினார். ஆனால் இன்றோ கிறைமியாவில் உள்ள 70விழுக்காட்டிற்கு மேற்பட்ட ருஷியர் நிலை பெரும் சிக்கலாகி விட்டது. முன்னர் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட இப்பகுதி மக்கள் உக்ரேனுடன் இப்போது சேர்ந்திருக்க விரும்புகிறார்கள் இல்லை கடந்த மாதம் கிறைமியாவின் நாடாளுமன்றம் உக்ரேனிலிருந்து விலகி தன்னாட்சி பெற வேண்டுமென தீர்மானித்தது. உடனே உக்ரேனிய அரசு தீர்மானத்தை மீளப் பெறாவிட்டால் கடும் விளைவுகள் ஏற்படும் என எச்சரித்தது. உடனே ருஷ்யாவும் பதிலுக்கு உக்ரெயினை பொறுமையாக நடக்கும்படி மிரட்டியது ஏனென்றால் ருஷ்யா இனத்தவர் நலன்களோடு முன்னாள் சோவியத்தின் பாரிய கடற்படையின் கருங்கடல் பிரிவு கடற்படையணியின் தரிப்பிடமும் கிரைமியாவே ஆகும். இப்போது இப்பாரிய கடற்படைஅணிக்கு ருஷ்யாவும், உக்ரேனும் உரிமை கொண்டாடுகின்றன. இன்றும் இச்சிக்கல் தீரவில்லை. பெரும் கொந்தளிப்பு நிலைமையே இன்று கிறைமியப்பகுதியில் உள்ளது.

## முன்னைய சோவியத்துகளின் பெரும் கவலை

இவ்வாறாக பல மோதல் நிலைகளும், ஆங்காங்கே வெடிக்கும் சிறிய மோதல்களும் தவிர்க்க முடியாத நிலையில் பெரும் தகராறுகளை உருவாக்கும் அபாயம் தொடர்கிறது அத்தோடு தஜிகித்தான், ஜோர்ஜியா, அசர்பையான் போன்ற நாடுகளிலே அவ்வவ் நாட்டு ஆட்சியைக் கைப்பற்ற - பிரிந்துபோக என பல உளநாட்டு மோதல்கள் வேறு நடந்து வருகின்றன. இத்தகைய நிலைகளைப் பயன்படுத்தி தனது படைகளின் உதவியைக் கோருமாறு இந் நாடுகட்கு ருஷ்யா நிர்ப்பந்தம் கொடுக்கின்றது. எனவே இப்போது தஜிகித்தானில் நிலை கொண்டுள்ள ருஷ்யப் படை தஜிகித்தான் அரசுக்கு எதிராகப் போரிடும் இசுலாமிய அடிப்படை வாதிகட்கு எதிராக போரிடுகின்றது. ஆர்மீனியாவோடு மோதலில் ஈடுபட்டிருக்கும் அசர்பையான் எல்லைக்கு தனது படைகளை அனுப்புகின்றது. ஜோர்ஜியாவிலிருந்து பிரிந்து போக போராடும் அப்காசிய பிரச்சினையில் தலையிடுகின்றது. அதே சமயம் பைலாறஸ் (Belarus) நாடோ பொருண்மியச் சிக்கல்கள் காரணமாக ருஷ்யாவோடு சேர்வதை விரும்பும் நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டது. எனவே இப்போது ருஷ்யப் படைகள் உக்ரேயின், போல்டிக் பகுதியை தவிர்ந்த தமது முன்னைய எல்லையின் விளிம்புகளில் தரிக்கின்றன இவையெல்லாம் ருஷ்ய பெரும் தேசியவாத சிக்கலாக உருவெடுப்பதாக இப்போது முன்னைய சோவியத் குடியரசுகள் பெரும் கவலை தெரிவிக்கின்றன. ஏனென்றால் சிரினோவ்ஸ்கி போன்றோர் மட்டுமன்றி இப்போது நாடு கடந்தநிலையில் வாழ்ந்து விட்டு ருஷ்யா திரும்பியுள்ளஅலெக்சாண்டர் சோல் கனிட்சன் (Solzhenitsyn) போன்றோரே ருஷ்ய மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பல முன்னைய குடியரசுகளை மீண்டும் இணைக்க வேண்டும் என குரல் எழுப்புகின்றமை இந்நாடுகட்குபெரும் அச்சுறுத்தலாகவே உள்ளன.

## பொதுவுடமையாளர்களின மீள்வருகை

இவ்வாறாக ருஷ்யாவின் நிலையைப் போலவே முன்னாள் கிழக்கு ஐரோப்பியப் பொதுவுடமை வழிநின்ற நாடுகளின் நிலைகளும் விசித்திரமாகவுள்ளது. பொதுவுடமையாளர்களைத் தோற்கடித்து அடக்குமுறை ஆட்சிகளை அகற்றி சனநாயகத்தை மலரச் செய்ததாகக் கூறிக் கொண்ட சனநாயகவாதிகளைஇப்போதுஅப்பகுதி மக்கள விரும்புகிறார்கள்இல்லை. பொருண்மிய நிலையை உறுதிப்பாடடையச் செய்ய இவர்களால் முடியாததால் வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் தூக்கி வீசப்பட்டதாகக் கூறப்பட்ட பொதுவுடமையாளர்கள் இப்போது மீண்டும் தலை காட்டுகின்றார்கள், 'இவர்களின்மீள்வருகை' இப்போது பொதுவுடமைக் கட்சி என்றல்லாமல் வேறு சமூக சனநாயகக் கட்சிகள் என்கிற பெயர்களில் அமைகின்றது. முதலில் போலந்தில் பின்னர் லிதுவேனியாவில் இப்போது கங்கேரியில் என கம்யூனிஸ்ட்டுகள் தலையெடுக்கும் விந்தையும் இப்போது நடக்கிறது.

கடந்த செப்டம்பர் மாதம் போலந்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் இடது சனநாயக ஒன்றியம் என்கிற பெயரில் முன்னைய கம்யூனிஸ்ட்டுகள் வெற்றி பெற்று ஆட்சி அமைத்ததோடு 'சொலிடாரிட்டி' சுதந்திர தொழிற்சங்கத்தை அமைத்து கம்யூனிஸ்ட்டுகளை தோற்கடித்து மக்கள் ஆதரவோடு சனாதிபதியாகிய லெக்வலேன்சாவை அடுத்த சனாதிபதித்தேர்தலில் இக்கட்சி வேட்பாளரால் தோற்கடிக்கப்பட்டதுஇப்போது உறுதியாகிவிட்டது. இதுபோலவே மிக அண்மையில் -முன்னர் சோவியத்தின் கடும் பிடியில் அடக்கப்பட்டதாகக் கூறப்படும்கங்கேரி தனது முன்னைய ஆட்சியாளர் கங்கேரி சோசலிசக் கட்சி என்கிற பெயரில் தேர்தலில் வெற்றி பெற வழி வகுத்துள்ளது. ஆனால் இவர்கள் எல்லாரும் பழைய பொதுவுடமை கோட்பாடு கூறும் பொருண்மியநிலைக்குதிரும்பப் போவதை இப்போது ஆதரிப்பவர்கள் அல்ல. புதிய பொருண்மிய மறுசீரமைப்பை, செம்மையாக சீராக, செய்ய வேண்டுமென்றும் அதேசமயம் பழையனவற்றைமுற்றாக புறக்கணிக்கக்கூடாது என்கிற கொள்கையோடு புதிய சமூக சனநாயக தாராண்மை வாதக் கட்சிகளாக தம்மை உருவகப்படுத்துகின்றனர். இவ்வாறாக மாற்றத்திற்குள் இன்னொரு மாற்றம் இங்கெல்லாம் நிகழ்கின்றது.

இவ்வாறாக இங்கெல்லாம் நடைபெறும் மாற்றங்கள் இப்போது பலவாறாக விமர்சிக்கப்படுகின்றது. ''பொதுவுடமைத் தத்துவத்தின் இடத்தை இப்போது தீவிர தேசியவாதம் என்னும் தத்துவம் பிடித்துள்ளதாக''சிலர் கருதுகின்றனர். மரணப்படுக்கையிலிருந்தபோது றிச்சர்ட் நிக்சன் கூறிய ''ருஷ்யா மீண்டும் சாம்பல் மேட்டிலிருந்து மேலெழும்'' என்கிற கூற்று பொருள் பொதிந்ததாகவே தெரிவதாக இன்றும் சிலர் கருதுகின்றனர். எது எப்படியிருந்தபோதும், முன்னர் கார்ல் மாக்சே குறிப்பிட்டது போலவே மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதவையாகினும், அவை பழமையென்னும் கருப்பைக்குள்ளிருந்தே பிறக்கின்றன என்பதே இப்போது மெய்யாகி விட்டது.


**யாழ்ப்பாணம்**

**பல நோ. கூ. சங்கம்- வரைவுள்ளது**

**யாழ்ப்பாணம பல நோ. கூ. சங்க அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கான**

**கலந்துரையாடல்- 9. 7. 94**

தமிழீழ பொது நிர்வாக சேவைப் பகுதியினரால் 9. 7. 94 பிற்பகல் 2. 30 மணிக்கு சங்க கேட்போர் கூடத்தில் நடாத்தப்படவிருக்கின்ற மேற்படி கலந்துரையாடலில் சங்கத்தின் சகல அங்கத்தவர்கள், கிளைக் குழுக்களின் உறுப்பினர்கள், பணியாளர்கள் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

நன்றி,
கூட்டுறவுச் சேவையில்,

சொலமன். சூ. சிறில். — தலைவர்
திருமதி பு. நவரட்ணம் — செயலாளர்

(சி - 9772)

## அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின்

# அக்கரைச் சீமையில்... ஒரு நோக்கு!

புலம் பெயர்ந்து அந்நிய நாடுகளில் வாழும் மக்களில் பலர் இந்த மண்ணை மறந்து விட்டனர். என்ற குற்றச் சாட்டு உள்ளது

உயிர்ப் பயம், உழைப்பு, சுகபோகம் என்கின்ற காரணங்களுக்காக வெளிநாடுகளில் பலர் தஞ்சமடைந்துள்ள போதிலும் -

திருமணம் செய்து கொள்வதற்காக இளம் பெண்கள் வெளிநாடுகளை நோக்கிப் படையெடுப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

இந்த மண்ணின் புழுதி வாசத்தை மறந்து, இந்த தேசத்தில் வீசும் காற்றை மறந்து, வெளிநாடுகளுக்கு சென்றுள்ள மக்களில் பலர், தமிழன் என்கிற பண்பாட்டு விழுமியங்களை பாதுகாப்பதில் தவறிவிடுவதாக அறிகிறோம்.

ஒரு அடக்கு முறை அரசிற்கு எதிராக இரத்தம் சிந்தி ஏகப்பட்ட இழப்புக்கு மத்தியில் ஈழத் தமிழினம் போராடி வருகின்றது.

இந்தப் போராட்டத்தை தமக்கு வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு, வெளிநாடுகளில் உல்லாசத்தனமாக வாழ்க்கை நடத்தும் பலர், சமூக விரோத நடவடிக்கைகளுக்கும் தாக்கங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்

புலம் பெயர்ந்த பலரின் நிலை படுமோசமாகிக் கொண்டிருக்கின்றது.

எதுவித அர்த்தமும் அற்ற உயிரே கதியென - உழைப்பே போதுமென வாழ்ந்துவரும் பலர் (எல்லோரும் அல்ல) வாழ்வின் அர்த்தத்தை இழந்து 'வாழ்ந்து' கொண்டிருக்கின்றார்கள்.

சமீபத்தில் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய 'அக்கரைச் சீமையில்' என்ற நாவல் வாசித்தபோது மேற்குறிப்பிட்ட பிரச்சினை நெஞ்சில் திரையிட்டது.

இந்த நாவலில், இங்கிலாந்திற்கு புலம்பெயர்ந்து சென்றவர்களின் பிரச்சினையே முதன்மைப்படுத்தப்பட்டுஇங்கிலாந்தே களமாக்கப்பட்டுள்ளது.

> **'உந்த மாதிரி மாப்பிள்ளையை நாங்கள் கனவிலை கூட நினைக்க முடியாது!'**
> **'ஒண்டையும் விசாரியாமல் செய்யவோ?'**
> **'அப்படிச் செய்ததுகளெல்லாம் நல்லா இருக்குதுகள்!'**

நூலாசிரியர் இங்கிலாந்துக்குச் செல்லாமலேயே அந்த நாட்டையும், இலண்டன் மாநகரத்தையும் கண்முன் காட்சிப்படுத்த முனைந்துள்ளார். அதில் ஓரளவு வெற்றியும் பெறுகின்றார்.

''பெத்த பிள்ளையை எப்படிக் கண்காணாத நாட்டிற்கு அனுப்புறது?'' என்று தயங்கினாள் இந்திராணி.

''உங்கை எத்தினை போட்டுது ? முன்பின் தெரியாதது களைக் கட்டுறத்துக்கே பெற்றார் பிள்ளையளை அனுப்புகினம். போனதுகளும் நல்லாய் இருக்குதுகள்.''

தாய்க்கும் தந்தைக்கும் இடையில் நடைபெறும் விவாதத்தில் தந்தை வெற்றி பெறுகிறார். மகள் சாந்தி மணப்பெண் தோரணையில் இங்கிலாந்திற்கு அனுப்பி வைக்கப் படுகிறாள்.

அங்கு அவளை அடையக் காத்திருக்கும் நபர் ஒரு சமூக விரோதி, போதைவஸ்து கடத்துபவன்; ஏற்கனவே திருமணம் செய்து குழந்தை ஒன்றிற்கு தந்தையாகி மனைவியைக் கைவிட்டவன்.

அக்கா உறவு முறையான பெண்ணை நம்பி இங்கிலாந்திற்கு சென்ற சாந்தி படும் துயர்; கண்ணீர்; அவஸ்தை யாவும் விரிவாகக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

''அப்பா ஒண்டும் உங்களிட்டை உதவி கேட்கேலை. நீங்கள் கேட்டுக் கொண்டதற்காகத்தான் என்னை அனுப்பி வைச்சார். எனக்கு ஒரு வேலை எடுத்துத் தாங்கோ... உங்கடை காசை நான் உழைச்சுத் தாறன்.''

''நீ .. இஞ்சை கலியாணம் கட்ட வந்தவளே தவிர, உழைக்க வரேலை. வேலைக்குப்போக முடியாது. உடனடியாகக் கல்யாணம் செய்ய வேண்டும்''

''நான் என்னுடைய வாழ்க்கையைப் பாழாக்கத் தயாரில்லை.''

மனசுக்குள் குமைந்து குமைந்து நடைபெறும் போராட்டம் உரையாடலில் நன்கு வெளிப்படுகிறது.

நம்பி வந்த உறவுப் பெண்ணாலேயே சாந்தி ஏமாற்றப் படுவதும் தன் நிலைமையை வெளிப்படுத்த முடியாமல் வருந்துவதும் நூலாசிரியரால் அழுத்தமாகச் சொல்லப்பட்டுள்ளது.

சாந்தி என்ற இளம் பெண் ஏமாற்றப்பட்டு விருப்பமில்லாதவனின் கையில் சிக்குப் படுவதும் அவள் எதிர்த்து பின்னர் தப்புவதும் புலம் பெயர்ந்த எமது பெண்களின் யதார்த்தம் இதுதான் என எழுத்தாளர் சொல்லும் செய்தியாகப்படுகின்றது.

சாந்தி தான் விரும்பிய - தன் மனசுக்குப் பிடித்தமானவனை அடைவது சாந்தியின் துணிச்சலுக்கும் உறுதிக்கும் கிடைத்தவெற்றியாகவே படுகிறது.

ஆயினும், இறுதியில் ஏற்படும் 'சந்தோஷ முடிவு' வலிந்து செய்யப்பட்டதாக-நாடகத் தனமானதாகப் படுகின்றது.

இந்த நாவலின் பாத்திர வார்ப்பும் சரி, கதை நகர்த்தப்படுவதும் சரி மிக இயல்பாக உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

எழுத்தாளர் சொல்ல எத்தனித்துள்ள கரு, இன்றைய எமது சமுதாயத்தில் முக்கியம் வாய்ந்த பிரச்சினையாகும்.

திருமணம் என்கிற சடங்கு பெண்ணிற்கு நடந்து முடிந்தால் போதும் என்ற எண்ணத்தில், எதுவித சமூகப் பொறுப்புமில்லாமல் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும் இளம் தமிழ்ப் பெண்கள் இவ்வாறாக பல தொல்லைகளை அனுபவிக்கின்றார்கள்.

நூலாசிரியர் சொல்லவந்த விஷயத்தை அலட்டாமல் தெளிவாகச் சொல்லமுனைந்திருப்பதை கவனிக்க முடிகின்றது.

''ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொரு திறமை வேணும் அண்ணை. ஆயுதம் ஏந்திப் போராடுகிற திறமை எனக்கில்லை.''

- என்று இலண்டனில் படித்துக் கொண்டு வேலை பார்க்கும் விஜயன் சொல்கிறான். ஒரு வெட்கக்கேடான விஷயத்தை அவன் பெருமையாகச் சொல்வதாகவும் அதை அவன் நியாயப்படுத்த முனைவதாகவும் நூலாசிரியர் சித்தரித்துள்ளார்.

இந்த மாதிரியான - தேசப் போராட்டத்தில் ஒரு சிறிய உதவியைத்தானும் செய்யாத அதே நேரம் தனக்கு படிக்கின்ற, வேலை செய்கின்ற திறமைதான் உள்ளது என்ற கருத்துத் தொனிக்க கூடியதாக, பேசி வரும் இளைஞனை நூலாசிரியர் 'கதாநாயகனாக'க் காட்டியிருக்கத் தேவையில்லை.

படித்து, வேலை செய்து கொள்கின்றவர்கள் போராடத் தேவையில்லை என்று ஆசிரியர் சொல்ல வருகின்றாரா என்கிற எண்ணம் அடிமனசுள் ஏற்படுகின்றது.

91 ஆம் ஆண்டு எழுதிய இந்த நாவலை, வசதிகள் அற்ற காரணத்தினால் சமீபத்தில் தான் நூலாசிரியர் பதிப்பித்து வெளியிட்டுள்ளார் என்பதும்-

இந்த மூன்றாண்டுகளில் திரும்பத்திரும்ப வாசித்து திருத்தம் செய்வதற்கு இது உதவியது என்றும் முன்னுரையில் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் எந்த ஆண்டில் இக்கதை நடைபெறுகிறது என்பதை ஆசிரியர் தெளிவாகச் சொல்லவில்லை-

''ஆமிக்காறர் கோட்டைக்குள்ளை இருந்து ரவுணுக்குச் 'ஷெல்' அடிக்கிறான்கள்''

இந்த உரையாடலிற்கும் 91 ஆம் ஆண்டுக்கும் சம்பந்தமில்லை இந்த ஆண்டு கோட்டையில் இராணுவம் இல்லை.

எமது சமகால இலக்கியங்கள் காலத்தைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். காலத்தின் பதிவாகவே இலக்கியங்கள் அமைய வேண்டும்.

**வவுனியா திலிபன்**

---

# வளர்ச்சிப் பாதையில் நவீன ஓவியக்கலை

## ஓவியக் கலைஞர் மாற்குவுடன் ஓர் நேர்காணல்

**- ரகுராம்**

ஈழத்தின் நவீன ஓவியக் கலை வளர்ச்சியில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவரும், அறுபதுகளின் ஆரம்பத்திலும் தொடர்ந்தும் ஓவியக் கலையின் புதிய நுட்பங்களை ஆக்குவதிலும் அறிவதிலும் ஆவலாயிருந்து வரும் திரு. மாற்கு அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

உற்சாகமாக உரையாடிய அவரிடம்,

உங்களது ஓவிய வாழ்க்கையின் ஆரம்பத்தில் நீங்கள் எந்த வகையானஓவியங்களை வரைவதில் ஆர்வம் காட்டினீர்கள் என்று கேட்டபோது,

- ஆரம்பத்தில் மரபு ரீதியான பாரம்பரிய பாணியிலேயே ஓவியங்களை வரைந்தேன். எனினும் எனது உணர்வுக்களை வெளிக்காட்ட நவீன ஓவியங்களே வாய்ப்பாக அமைந்தன. உலகில் நவீன ஓவியங்களின் பாலிருந்த மதிப்பும் என்னை அந்தப் பாணியிலமைந்த ஓவியங்களை வரைய தூண்டியது என்றும் கூறலாம்.

நவீன ஓவியங்கள், பாரம்பரிய ஓவியமரபிலிருந்து வேறுபட்டு நிற்கும் நிலையில், நவீன ஓவியக்கலையின் நோக்கம் என்ன என்ற போது,

இந்த வினா எல்லோரும் கேட்கும் வினா. காலத்தின் மாறுதலிலிருந்து தோன்றியதே இம்மரபு, ஒருவாறு பார்த்தால் ஆதிகால ஓவியங்களும் ஒரு வகையில் இன்றைய இப்புதிய மரபை ஒத்திருப்பதைக் காணலாம்.

சாதாரணமான ஒருவன் ஒரு காட்சியைப் பார்ப்பதற்கும், ஒரு கலைஞன் அதே காட்சியைப் பார்ப்பதற்கும் வித்தியாசமிருக்கிறது. ஒரு காட்சியை உளரீதியாகப் பார்க்க வேண்டும் இவ்வாறு அகப்பார்வைக்கு நவீன ஓவியக்கலை வழிவகுக்கின்றது. இது நவீன ஓவியக் கலையின் நோக்கம். ஆனால் பாரம்பரிய ஓவியக் கலை உள்ளதை உள்ளபடியே கூறும் என்றார் மாற்கு.

பாரம்பரிய ஓவியக் கலையில் ஓர் வெளிப்படைத் தன்மை தெரியும் நவீன ஓவியக் கலையில் அவ்வாறு காண முடியவில்லையே எல்லோராலும் இம்மரபைப் புரிந்து கொள்ள முடியாமலிருக்கிறதே என்று கேட்டோம்.

நவீன ஓவியக்கலையைப் புரிந்து கொள்ள முடியாதிருக்கின்றது என்று கூறினால் அது என்றுமே புரிந்து கொள்ள முடியாததாகத்தானிருக்கும். நவீன ஓவிய மரபின் வளர்ச்சியும் ஏற்பட்டிருக்காது. வளர்ச்சி ஒன்றைக் காணவேண்டுமானால் ஓவியத்துறையோ, அந்தக்கலைத் துறையோ புதுமை படைக்க வேண்டும். புதிதாகச் செய்வதற்கு மரபு ரீதியாக இடந்தருவதில்லை. மரத்தைப் பார்த்து மரத்தைப் போல் வரைவதும், மாட்டைப் பார்த்து மாடுபோல் கீறுவதும் புதுமையல்ல. மாட்டின் தன்மையை உணர்வை ஓவியத்தில் காட்ட வேண்டும் என பதிலளித்தார் அவர்.

மரபுரீதியான ஓவியங்களும் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனதானே என்றபோது,

பார்ப்பவனுக்கு அந்த உணர்வு மட்டும்தான் தெரியுமென்பதால்தான் உணர்வுகளை அவை முழுதாக வெளிப்படுத்துவதுபோல் படுகின்றது. எனத் தெரிவித்தார் மாற்கு.

எல்லாவற்றையும் விரிவாக காட்டமுடியாது. எங்களுக்குத் தேவையானது முக்கியப்படுத்தப்பட வேண்டும்

இந்த வகையில் குறியீட்டு வடிவங்கள் நவீன ஓவிய மரபில் முக்கிய இடம் பெறுகின்றன. பிரதிபண்ணப்படுவது கலையாக நான்கருதவில்லை. கலை ஆக்கப்படவேண்டும் எனத் தொடர்ந்தார். மரபு ரீதியான ஓவியங்கள், அழகுணர்ச்சி உடையவைதான். ஆனால் அவற்றை ஆக்கப் படைப்பாக கருதமாட்டேன் என்றும் கூறினார்.

மரபுரீதியான ஓவியங்கள் ஒரே ஒரு காட்சியை ஒரு கோணத்தில் காட்டும்போது நவீன, ஓவியங்களை நோக்கு



வோரின் பார்வைக் கோணங்கள் வேறுபட இடமுண்டு. இந்த நிலையில் ஆக்கியோனின் கருத்தை. நோக்குவோன் உணர இடமுண்டா எனக் கேட்டபோது,

ஒவ்வொருவருக்கும் பார்வை வேறு, பொருள் ஒன்று. இதில் பிழையில்லை. இது தான் சுவையை இன்னும் கூட்டும் எனக் கருதுகிறேன் ஒருவனுக்கு அது எதுவாகத் தோற்றுகிறதோ அதுதான் அவனது பார்வை. ஆக்குவோனின் கருத்தைத் தான் பார்ப்பவனும் பெற வேண்டுமில்லை பார்ப்பவன் அதில் வேறு வகையில் தேடலை மேற்கொள்ளலாம் எனக் கூறினார் மாற்கு.

ஒரு சம்பவம், இடம், மரபு ரீதியில் காட்டப்படும்போது, வரலாற்று ஆவணமாக கருதப்படுகையில், நவீனமரபில், இந்த வகையில் காட்ட முடியுமா என வினாவியபோது,

முடியும். பிகாசோவின் குவார்னிகா எனும் ஓவியம் யுத்தம் சம்பந்தமானது. இன்று அதனை அறியாத ஓவியன் இருக்கமுடியாது. அவ்வளவு தத்ரூபமாக, நவீன மரபில் காட்டப்பட்டிருக்கின்றது. அங்கு குறியீடுகள்தான் இடம்பெறுகிறது. இது எவ்வாறு இன்றும் தெளிவாக உணர்த்துகிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும் எனப் பதிலளித்தார்.

வரலாற்று ரீதியாக நவீன ஓவிய மரபின் ஆரம்பம் எப்படியிருந்ததுஎனக்கேட்டோம்

சேஸான் தொடர்ந்து பிக்காசோ ரபிறேக் என நவீன மரபை வளர்த்தார்கள் 18-ம் நூற்றாண்டளவிலேயே பழைய மரபுகள் உடைக்கப்பட்டு புதிய மரபு தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. வான்கோ போன்றவர்கள் உணர்ச்சியை நவீன மரபில் தந்தார்கள் எனக் கூறினார்.

நவீன ஓவிய மரபு எங்களுடைய பிரதேசத்தில் பெற்றிருக்கும் வளர்ச்சியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் எனக் கேட்டபோது,

வளர்ச்சி, மகிழ்ச்சி தருவதாகஇருக்கிறது. இளம் ஓவியர்கள் சிறப்பாக வரைகிறார்கள். இங்கு வெளிவரும் சஞ்சிகைகளில் கூட இந்த மாற்றம் தெரிகிறது. ரமணி, தயா, கோபாலி, ராஜன், ஜாக்குலீன், வாசுகி, கொன்ஸ்ரைன்ரைன், பக்சி, அருந்ததி என இளைய தலைமுறை குறிப்பிடப்பட வேண்டியவர்களாக மிளிருகின்றனர் என்றார்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்றத்தை டி. பி. விஜேதுங்கா நன்கு திட்டமிட்ட பின்பே கலைத்தார்

ஆயுட் காலத்தைப் பூர்த்தி செய்வதற்கு எட்டுமாதங்களுக்குமுன்பாகவே சிறிலங்காவின்ஒன்பதாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டது. இது குறித்து அரசியல் அவதானிகளில் பலருக்கு மட்டுமன்றி சிரேஷ்ட அமைச்சர்கள் பலருக்கு கூட அதிர்ச்சி ஊட்டுவதாக அமைந்து விட்டது. இது ஏன்? இவ்வாறு சம்பவித்தது இதன் காரணம் என்ன? பாராளுமன்றம் திடீரெனக் கலைக்கப்பட்டது எப்படி? என்பது தொடர்பாகப் பலவிதமாகவும் அலசப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்கா இந்த நடவடிக்கையை திட்டமிட்டு மேற் கொண்டாரா? அல்லது தனது நடவடிக்கைகளுக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையே அதிகரித்து வரும் உட்பூசல்கள் காரணமாக தனது அணியைச் சேர்ந்தவர்கள் மத்தியில் உருவாகிவரும் நம்பிக்கை குறைவின் காரணமாக ஏற்பட்ட பீதியினால் இந்த முடிவை மேற்கொண்டாரா? என்பன உட்பட பல விதமான ஊகங்கள் அரசியல் அரங்கில் முகிழ்ந்திருப்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

ஐ தே. க உறுப்பினர்களுக்கிடையே டி. பி. விஜேதுங்காவின் தலைமைத்துவம் தொடர்பான நம்பிக்கைத் தன்மை வெகுவாக குறைந்து கொண்டு வந்தமை கடந்த பதின் மூன்று மாதங்களாக நீடிக்கும் அவரது ஆட்சியில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் உணரப்பட்டது ஒன்று தான். இதனால் ஜனாதிபதி தேர்தலுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கும் அவர் அதற்கு முன்பாக மக்கள் கருத்தை நாடிபிடித்துப் பார்ப்பதற்காக இந்த துணிச்சலை மேற் கொண்டதாகவும் கூட நம்பப்படுகிறது.

ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் தான் முதலில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறும் கட்சி இலகுவில் பாராளுமன்றத்தில் பெரும் பான்மையைப் பெற்று விடும் என்றே கருதப்பட்டிருந்தது. ஆனால் பல்வேறு வகையான பிணக்குகளுக்கும் மத்தியில் பிளவுபட்டு மனவேறுபாடு கொண்டிருக்கும் தனது கட்சி உறுப்பினர்கள் தனது வெற்றிக்காக உண்மையான விசுவாசத்துடன் கடுமையாக உழைப்பார்கள் என்பதில் டி. பி. விஜேதுங்காவுக்கு சந்தேகம் வலுத்து விட்டிருந்தது.

இதனால் பாராளுமன்றத்தின் ஆயுட் காலம் நீடிப்பது தனது பதவிக்கே குழி பறித்து விடக் கூடும் என்ற எண்ணமு டி. பி. விஜேதுங்காவின் மனதில் மேலோங்கியிருந்தது. அதாவது பிரேமதாசாவின் ஜனாதிபதி ஆட்சிக்கு எதிராக எதிர்க்கட்சி அங்கத்தவர்களுடன் ஐ.தே.க. வின் சில உறுப்பினர்கள் சிலர் இணைந்து 1991 ம் ஆண்டு செப்டம்பர் 21 ம் திகதி பாராளுமன்றத்தில் கொண்டுவந்த குற்றப் விசாரணை கோரும் பிரேரணை போன்ற தான ஒரு ஆபத்தை தான் எதிர் நோக்க வேண்டி ஏற்படலாம் என்ற அச்சம் டி. பி. விஜேதுங்காவிற்கு மேலோங்கியது இத்தகைய ஒரு ஆபத்தை தம்மால் இலகுவில் சமாளித்துவிட முடியாது என்பதைப் புரிந்து கொண்ட நிலையில் தான் அவர் பாராளுமன்றத்தின் ஆயுள் காலத்தைக் குறைக்க முடிவு மேற் கொண்டதாகவும் நம்ப இடமுண்டு.

இதே போன்று 1992 மார்ச் 17-ம் திகதி அன்றைய பிரதமராகவும் நிதியமைச்சராகவும் தொழில் அமைச்சரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமாகப் பதவி வகித்த டி. பி. விஜேதுங்காவிற்கு எதிராக எதிர்க்கட்சிகளின் சார்பில்சுதந்திரக் கட்சியின் பிரதமகொறடாவானறிச்சாட்பத்திரான பாராளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வந்ததும், அதற்கு பல ஐ. தே. க. ஆதரவாக பச்சைக்கொடி காட்டியதும், பின்னர் அன்றைய ஜனாதிபதி ஆர். பிரேமதாசா சகல ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து இதில் எதிர்க்கட்சிக்கு ஆதரவாக நடந்தால் கட்சியை விட்டு வெளியேற்றி விடுவதாக உறுப்பினர்களை எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய இதே பாராளுமன்றம் தொடர்ந்து பதவியில் நீடிக்கின்ற ஒரு நிலையில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றியைப் பெற்றுக் கொண்டாலும் பாராளுமன்றத்தின் தயவில் தங்கியிருக்க வேண்டிய ஒரு இக்கட்டான சூழல் டி. பி. விஜேதுங்காவிற்கு இருக்கிறது. இதனால் பிரேமதாசா விசுவாசிகள், ஜே. ஆர். அனுதாபிகள் என்பன உட்பட பல்வேறு தரப்பினரையும் திருப்திப்படுத்தி தொங்கு நிலையிலான அரசாங்கத்தை தொடர்ந்து நடத்துவதிலும் பார்க்க தமக்கு நம்பிக்கையானவர்களை மட்டும் கொண்ட அடித்தளத்தை உருவாக்கும் எண்ணத்தில் பாராளுமன்றத்தை கலைத்தார் எனக் கொள்வதும் தவறான தொன்றல்ல. பெரும்பான்மை பலம் பெற்ற ஆளும் கட்சியாக தமது கட்சி பாராளுமன்றதிற்கு தெரிவு செய்யப்படாது விட்டாலும் தமக்கு விசுவாசமான ஒரு சிலரையேனும் கொண்ட எதிர்க்கட்சியாக ஐ. தே. க. விளங்குவது ஜனாதிபதி தேர்தலில் தாம் போட்டியிடுவதற்கு தெம்பூட்டும் என்று டி. பி. விஜேதுங்கா கருதுவதாகவும் கூறப்படுகிறது

பாராளுமன்றத்தைக் கலைத்து அதற்கான தேர்தல் முதலில் நடத்தப்பட்டால் ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு வேட்பாளரும் தத்தம் சொந்த வெற்றிக்காகவேனும் கடுமையாக உழைக்க வேண்டி உள்ளாக்கப்படுவர் என்றும், அவர்களது வெற்றி அல்லது தோல்வி ஊர்ஜிதமாக்கப்பட்ட நிலையில் ஜனாதிபதி தேர்தலை தாம் விரும்பியவாறு கையாளும் வாய்ப்பு ஏற்படும் என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பாராளுமன்றதேர்தலில் ஐ.தே.கவின் வெற்றி ஊர்ஜிதப்பட்டாலேயே இத்தகைய அரசியல் சதுரங்க ஆட்டங்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்தலாம் எனவும் கூறப்பட்டிருந்தது.

எது எவ்வாறாயினும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டது. இது தொடர்பாக ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் பகிரங்கமாகவே குற்றம் சாட்டியிருக்கிற போதும் இது ஓர் அரசியல் தற்கொலையாக முடியும் என ஆளும் கட்சி உறுப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ள போதும் டி. பி. விஜேதுங்கா எதனையும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

ஆனால் டி. பி. விஜேதுங்காவைப் பொறுத்தவரையில் அவர் மிகவும் திட்டமிட்ட நிலையில் தான் இம்முடிவை மேற்கொண்டுள்ளார். என்றே எண்ண வைக்கின்றது. நீண்டகாலமாக இதற்காக அவர் திட்டமிட்டு செயற்பட்டு வந்துள்ளார் என்று கருதவும் இடமுண்டு. தென் மாகாண

**கலைப்பின் பின்னணியில் நிகழ்ந்தது என்ன ?**

**நிமலராஜன்**

சபைத் தேர்தலைத் தொடர்ந்து தோல்விக்கு கட்சியின் மூத்த உறுப்பினர்களின் நடவடிக்கைகளே காரணம் என்பதை மிகவும் தெளிவாக உணர்ந்து கொண்டிருந்த போதும் எந்தக் கருத்தையும் அவர் வெளிப்படையாக தெரிவித்து விடவில்லை. கட்சியின் செயலாளர் என்ற வகையில் அமைச்சர் சிறிசேனகூரே தோல்விக்கு தலை வணங்குகிறேன் தோல்விக்கான காரணங்களை ஆராய்ந்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கருத்து தெரிவித்திருந்த போதும் டி. பி. விஜேதுங்கா அதனை பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. கட்சி செல்லும் போக்கை அந்த நிலையிலேயே ஓரளவுக்கு அனுமானிக்கப்படக் கூடியதாகவே இருந்தது, எனவே தான் கட்சிக்குள் தனது நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ளவும் தன்னை பலவீனப்படுத்துவார்கள் என்று கருதப்பட்டவர்கள் மீது தீவிர கவனம் செலுத்தவும்; பல குத்து வெட்டுக்களை கச்சிதமாக நிறைவேற்றி தமக்கு இசைவாக இல்லாதோரை ஓரம் கட்டவும் சரியான சூழலை உருவாக்கவே பாராளுமன்றம் ஆரவாரமின்றி கலைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஒன்றுக்கு தயாராகுங்கள் எனக்கட்சி அலுவலகங்களுக்கும், கட்சி அமைப்பாளர்களுக்கும் கட்சியின் தலைமைப்பீடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பகிரங்கமாக தெரிவிக்கப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால் இந்த அறிவிப்புக்கும் பின்னர் கட்சியின் அலுவலகங்களும் அமைப்பாளர்களும் செயற்படும் முறை பற்றி இரகசியமாக தகவல்கள் திரட்டப்பட்டன. ஜனாதிபதியின் மேலதிக செயலாளராக கடமையாற்றும் சரத் அமுனுகம தலைமையிலான விசேட குழுஇப் பணியில் ஈடுபட்டது. இக்குழுவே எந்த தேர்தல் நடத்துவதன் மூலம் கட்சியை சீர் செய்யலாம் எனக் கொடுத்த சிபார்சுக்கு அமையவே இதுமேற் கொள்ளப்பட்டது.

கடந்த 13-ம் திகதி திங்கட்கிழமை அமைச்சர் பி. தயாரட்ணாவை ஜனாதிபதி செயலகத்திற்கு அழைக்கப்பட்டு முதலில் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படுவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது இது குறித்து அதிகம் விருப்பமின்மையைக் காட்டிய இவர் ஜனாதிபதி தேர்தல்முதலில் நடத்த முடியும் என்றே ஆலோசனை தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்து வெளி விவகார அமைச்சர் ஏ.சீ.எஸ். ஹமீட் ஜனாதிபதி செயலகத்திற்கு அழைக்கப்பட்டார். அவர் ஜனாதிபதி தேர்தலையும், பாராளுமன்றத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்தினால் ஐ.தே. கவிற்கு நன்மை பயக்கும் என்று ஆலோசனை கூறியுள்ளார்.

இத்தகைய சந்திப்புகள் நடந்த வேளையில் 15-ம் திகதி புதன் காலை எட்டு மணிக்கு அமைச்சரவையைக்கூட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இதற்கு முன்பாக முக்கிய இரு அமைச்சர்களை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட ஜனாதிபதி விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற இருப்பதால் அமைச்சரவைக் கூட்டத்தின் பின் தம்மைச் சந்திக்கும்படி கேட்டுக் கொண்டார். இதேவேளை இவ்வாறான அழைப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அமைச்சர்கள் சிறிசேனகூரே, டிரோன் பெர்ணாண்டோ, கே. என். சொக்சி ஆகியோருக்கும் சென்றது இவர்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு விரைந்தனர்.

அப்போது நேரம் காலை 10-35 முன்னர் அழைப்பு வந்த இரு அமைச்சர்கள் முன் கூட்டியே ஜனாதிபதியுடன் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டு இருந்தனர் அப்போது சென்ற நான்கு அமைச்சர்களும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை சுமார் ஒருமணி நேரத்திற்கு மேலாக இவர்கள் ஜனாதிபதி மாளிகை வரவேற்பு அறையில் காவல் காத்து நின்றனர். இதன்பின்னர்அக்கூட்டத் தொடர் முடிவடைந்தது ஆனால் கூட்டத்தில் கலந்து கொண்ட அந்த இரு அமைச்சர்களும் ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியேறவில்லை; இதனைத் தொடர்ந்து பிரதமர் உட்பட காவல் காத்துநின்ற நான்கு அமைச்சர்களுக்கு அழைப்பு வந்தது. ஜனாதிபதி மாளிகை மண்டபத்திற்கு இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அதில் டி. பி. விஜேதுங்கா பேசத் தொடங்கினார். ''எனக்கு கிடைத்த தசவல்களின் அடிப்படையில் பார்க்கும்போது ஐ. தே. க வை சேர்ந்த அமைப்பாளர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக இதுவரை எந்த வேலைகளிலும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால் ஐ. தே. க. வேட்பாளர் தோல்வியடையலாம். அத்துடன் பொதுத் தேர்தல் தொடரும்போது ஐ. தே. க. மேலும் படுமோசமாகத் தோல்வியடையும். இவற்றைக் கருத்திற் கொண்டு கட்சியின் நலனுக்காக கட்சியின் பொதுச் செயலாளரோடும் வேறு ஆலோசகர்களுடனும் கலந்துரையாடியுள்ளேன். இதன் அடிப்படையில் நான் மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கை சில சமயம் உங்களுக்கு அதிர்ச்சி தருவதாக இருக்கக் கூடும்.'' என்று பூடகமாகப் பேசிய பின்னர் பாராளுமன்ற கலைப்பு பற்றிய தீர்மானத்தை வெளியிட்டார்.

பாராளுமன்றத்தின் ஆயுட் காலம் இன்னும் எட்டுமாதம் நீடிக்கக் கூடியது என்றும், பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் அபிவிருத்தித் திட்டங்கள் பாதிப்படையும் என்றும் எனவே முதலில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதே உசிதமானது என்றும் பிரதமர் ரணில் கருத்து வெளியிட்டார். அத்துடன் சிறுபான்மை மக்களின் வாக்குகள் ஐ. தே. கவிற்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்வதன் மூலமே பொதுத் தேர்தலில் வெற்றிக்கு வழி சமைக்கலாம் என்றும் அதற்கான சூழல் இல்லாத நிலையில் பொதுத் தேர்தல் நடத்துவது பொருத்தமானது அல்ல என்றும் விவாதிக்க முற்பட்டார்.

எனினும் டிரோன் பெர்னாண்டோவும், வீரசிங்க மல்லிமாராச்சியும் பொதுத் தேர்தல் நடத்தப்படுவதற்கு ஆதரவு தெரிவித்ததுடன் இதன் மூலம் தொகுதிகளின் அபிவிருத்தி நடைபெறும் என்றும் இது ஜனாதிபதி தேர்தலில் ஐ. தே. க. இலகுவாகவெற்றி பெற வாய்ப்புஅளிக்கும் என்றும் தெரிவித்தனர். இச் சந்திப்பில் கலந்து கொண்ட சிறிசேன கூரே ''ஜனாதிபதி தேர்தல் முதலில் நடத்தப்படும் நிலையில் ஐ. தே. க. தோல்வி அடையும் என நீங்கள் எதிர்பார்த்தால் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் ஒன்றுக்கு வழி விடுங்கள்'' எனத் தெரிவித்து விட்டு உதடுகளை இறுக மூடிக் கொண்டார். சொக்சி எந்தக் கருத்தையும் தெரிவிக்காது மௌனமாக இருந்து விட்டார்.

சில தினங்களின் பின், இச் சந்திப்பு நிறைவு பெற்ற ஐந்து தினங்களின் பின் 20-ம் திகதி திங்கட்கிழமை பாராளுமன்றத்தைக் கலைக்கும் தமது தீர்மானத்தை பிரதமருக்கும் ஏனைய ஆலோசகர்களுக்கும் தெரிவித்தார். இதனை தொடர்ந்து பிரதமர் ரணில் பதற்றம் அடைந்து காணப்பட்டார் இதனை, தான் முழு அளவில் எதிர்ப்பதாக தனது ஆலோசகர்களுக்கு தெரிவித்ததுடன் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனாவுக்கும் தெரிவித்துள்ளார். இத் தீர்மானம் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே கசிந்த போது ஐ. தே. க உறுப்பினர்கள் பதற்றமடைந்தனர். பாராளுமன்ற வளாகத்தினுள் சிறு சிறு குழுக்களாகக் கூடி கலந்துரையாடல்களை நடத்தினர். இது குறித்து பலரும் விசனம் தெரிவித்தனர். எதிர்கால தேர்தல்

(11ஆம் பக்கம் பார்க்க)

# எமது சமுதாயத்தை வெட்கி தலைகுனிய வைக்கும் ஒரு செயலே ராக்கிங்

பெற்றோர் மத்தியில் பெரும் கலக்கத்தையும் மாணவர் மத்தியில் பரபரப்பையும் தமிழ் சமூகத்தினரின் கவனத்தையும் கடந்த சில தினங்களாக யாழ். பல்கலைக் கழகம் ஈர்த்து நிற்கின்றது.

அங்கு செல்லும் புதுமுக மாணவ மாணவிகளுடன் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வதாக பேசிக் கொள்ளும் மாணவர்கள் 'ராக்கிங்' எனும் பெயரில் நடத்தும் அட்டகாசங்கள் வெளியுலகில் கவனத்தை வெகுவாகக் கவர்ந்துள்ளது. 'ராக்கிங்' எனும் போர்வையில் பல்கலைக் கழகத்துள் நடப்பது என்ன என்பதை எம் வாசகர்களுக்கு வெளிப்படுத்

## புரிந்துணர்வை ஏற்படுத்துகிறது

திட எமது ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த இருவர் பல்கலைக் கழகத்திற்குள் நுழைந்தனர். பல்வேறு திக்கிலும் பரந்துபட்டு நின்ற பலதரப்பட்டவர்களையும் அணுகி அவரவர் கருத்துக்களை திரட்டி கொண்டனர். மனம் திறந்து வெளிப்படையாகவே பேசி அவர்கள் தமது பெயர்களை மட்டும் வெளியிட வேண்டாமென கேட்டுக் கொண்டனர்.

கும்பல் கும்பலாக ஆண்களும பெண்களுமாக நின்று கொண்டிருந்தனர். அவர்களைத் தாண்டி தனித்துச் சென்று கொண்டிருந்த மூன்றாம் வருட மாணவன் ஒருவரை மடக்கிப்பிடித்து வினவிய போது அவர், 'ராக்கிங்' கை நான் மனமார வரவேற்கிறேன். இது அனைவருடனும் எங்களுக்கு ஒரு புரிந்துணர்வையும் பரஸ்பரம் நல்லுறவையும் வளர்த்திட வழி சமைக்கிறது. இச் சந்தர்ப்பத்தலேயே நாம் கூச்சமின்றி ஆண், பெண் வேறுபாடின்றி எல்லோருடனும் பழகும் வாய்ப்புக் கிடைக்கின்றது. இந்த 'ராக்கிங்' ஒவ்வொரு மாணவர்களினதும் மனநிலைகளுக்கு ஏற்ப வேறுபட்டேயுள்ளது. ஒவ்வொரு வரும் தத்தமது மனதுக்குள் ஏற்படும் கேள்விகளை வெளிப்படையாகவே கேட்டு விடுவர், வருடாவருடம் இந் நிகழ்வு இடம் பெற்றுவருவதால் புதிதாக வரும் மாணவர்களும் இவற்றை எல்லாம் எதிர்பார்த்தே இங்கு வருவதால் சிக்கல்கள் எழுவதில்லை. புதிதாக வரும் மாணவருள் யாருடன் மிக மோசமாக நடந்து கொள்கிறாமோ அவர்களுடன் தான் பின்பு மிக நெருக்கமான உறவையும் வைத்துக் கொள்வோம் என்கிறார்.

நாம் உரையாடிக் கொண்டிருந்த போது அங்கு வந்த முதலாம் வருட மாணவன் ஒருவருடன் எம்மை அறிமுகம் செய்து கொண்டு அவரது கருத்தை வினவினோம்

நான் பல்கலைக்கழகத்தினுள் நுழையும்போதுஎனக்கு பெரியளவில் ராக்கிங் நடக்கவில்லை. நாம் பாதிக்கப்பட்ட மாணவர்கள் என்ற வகையில் சற்று அனுதாபமே காட்டப்பட்டது. எனினும் சில சில செய்கைகளில் ஈடுபடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டேன். அவர்கள் கேட்பவற்றுக்கு இசைந்து அதற்கேற்ப நடந்து கொண்டால 'ராக்கிங்' பாரதூரமானதாக இருக்காது. மாறாக முண்டு பிடித்துக் கொண்டு நின்றால்மிக மோசமாகவே இருக்கும்.

இருந்த போதும் மற்றவர்கள தமக்கு நடந்ததாக கூறும் வகையில் பார்க்குமிடத்து நான் பாக்கியசாலி. இத்தகைய 'ராக்கிங்' அவசியமானதாகவே கருதுகிறேன். மாணவிகளுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கடந்த காலங்களில் கிடைக்காத எமக்கு ஆரம்பத்தில் சற்று கூச்சமாகவே இருந்தது.

ராக்கிங்கின் போது மாணவிகள் இடையே எம்மை அமர வைத்து ராக் பண்ணுவதால் பெரும் பதற்றமும் பயமுமே ஏற்பட்டது. அப்போ இத்தகைய செயல்கள் எம்மை சில இச்சைகளுக்குள்ளாக்கிய போதும் நாளடைவில் அது

எமக்கிடையே சகோதர உணர்வினை ஏற்படுத்திவிட்டது. ராக்கிங் என்பது கீழ்த்தரமான கெட்ட நோக்கங் கொண்டதாக இருக்கக்கூடாது என்பதே என் விருப்பம் என்றார் அவர்.

ஆண்களை சந்தித்து கலந்துரையாடிய நாம் அதன் மறு பக்கத்தில் இருக்கும் பெண் பிள்ளைகளுடனும் உரையாடி அவர்களது கருத்துக்களையும் திரட்டிக் கொள்வது எமது நோக்கத்தைப் பூரணப்படுத்தும் என்பதால் இரண்டாம் வருட கலைப்பீட மாணவி ஒருவரைச் சந்தித்தோம்.

'எமது பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் 'ராக்கிங்'கில் கூட ஏற்றத்தாழ்வுகளும் பிரதேச வேறுபாடுகளும் காட்டப்படுகிறது. இது வேதனை தரும் ஒரு விடயமாக இருப்பதுடன தவிர்க்கப்பட வேண்டியதுமாகும். தற்போதைய ஆண்டுகள் அழகிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர் புதிதாக வரும் மாணவிகளில் அழகானவர்களைத் தேர்ந்து அவர்களையே மிகமோசமாக 'ராக்' பண்ணுகின்றனர். இதனைத் தொடர்ந்து அவர்களுடனேயே அவர்களது நட்பும் நெருக்கமாக இருந்து வருகிறது. இது ஒரு வகையில் மற்றவர்களைப் புறக்கணிப்பதாகிறது.

சிலசில பிரதேசங்களில் இருந்து வரும் மாணவர்களை யாராவது 'ராக்' பண்ண முற்பட்டால் அப்பிரதேசத்தைச் சேர்ந்த இங்குள்ள மாணவர்கள் குறுக்கிட்டு ஊரில் வைத்து தாம் தேவையான அளவு ராக் பண்ணிவிட்டதாகவும் இனியாரும் செய்யதேவையில்லை, செய்யவும் கூடாது என உத்தரவும் பிறப்பித்து விடுகின்றனர்.

சாதாரணமாகக் கதைத்துப் பேசி விபரங்களை பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதையே விரும்புகிறேன். மாறாக தரம்கெட்ட வார்த்தைகளையோ பெண்களை இழிவு படுத்தும் வகையில் யாரும் நடந்து கொள்வதையோ விரும்பவில்லைஎன்றார் அம் மாணவி.

இவருடன் தோழி போன்று காணப்பட்ட மற்றொரு மாணவி தனது உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தும் நோக்கில் இடைக்கிடையே குறுக்கிட்ட வண்ணமிருந்தார் அவரது அபிப்பிராயத்தையும் வாசகர்களுக்காக செவிமடுத்த போது, பரஸ்பரம் புரிந்து

ணர்வை ஏற்படுத்தும் நோக்கில் அறிமுகமான 'ராக்கிங்' எம் பல்கலைக்கழகத்தைப் பொறுத்து எதிர்மாறானதாகவே அமைந்துவிட்டது. இங்குநட்பு வளர்வதற்குப்பதிலாக பல்கலைக்கழக வாழ்நாள் முழுவதும் வெறுப்பையும் மனவேதனைகளையும் வளர்த்துவிடும் வகையில் உள்ளது. மிக கீழ்த்தரமாக 'ராக்கிங்' கிற்கு உள்ளாகும் மாணவி ஒருவர் பின் 'ராக்' பண்ணியவர்களை ஏறெடுத்துப்பார்க்காத நிலை இங்கு கணிசமான அளவு காணப்படுகிறது.

வேறு பல்கலைக்கழக மாணவர்கள் கூட இங்கு வந்து புதிய மாணவர்களை

எமது மாணவர்களின் உதவியுடன் 'ராக்' பண்ணுவது தற்போது சாதாரண விடயமாகிவிட்டது. இவர்களும் கீழ்த்தரமான முறையிலேயே நடந்துகொள்கின்றனர். இவர்கள் எமதுமாணவர்களுடன் எந்த வகையில் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ளப் போகிறார்கள். இதிலிருந்து 'ராக்கிங்' என்பது புரிந்துணர்வை ஏற்படுத்துவது எனக் கூறுவது அப்பட்டமான பொய் என்றார் ஆவேசத்துடன். மாணவர்கள் தத்தமது உள்ளங்களில் உறைந்து கிடக்கும் வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ளும் ஓர் செயல் என்பதே 'ராக்கிங்' என்பதன் உண்மையான உள்ளடக்கம் எனக் கூறியவாறு எம்மை நெருங்கி வந்தார் ஓர் மாணவன்.

**சந்திப்பு: சசிகரன்**

தோளில் பை ஒன்றைத் தொங்க விட்டவாறு அமைதியாக வந்த அவர். ''நீங்கள் வந்து விபரங்கள் திரட்டிக் கொண்டிருப்பதாக நண்பர் மூலம் அறிந்து எனது கருத்துகளை வெளிப்படையாகவே கூறிவிட வேண்டும் என்ற ஆவலிலும் 'ராக்கிங்' என்ற போர்வையில் நடக்கும் அக்கிரமங்களை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டி முகமூடிகளைக் கிழித்து எறிய வேண்டும் என்பதனாலுமே சந்திக்க விரும்பினேன்'' என்றார்வலையில் சிக்கிய மீனை மீண்டும் யாராவது கடலில் வீசுவார்களா? சந்தர்ப்பம் கொடுத்தோம்.

கவேயுள்ளது. விரும்பியோ விரும்பாமலோ பெரும்பாலானவர்கள் இதனை ஏற்கிறார்கள் என்பதற்காக இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. இத்தகைய வதைகளில் திழைப்பவர்களே இவர்கள் தமது சகோதரர்களிடமோ நண்பர்களிடமோ அன்றி காதலியிடமோ கேட்டு அறியமுடியாத, நிமிர்ந்து நின்று கேட்க முடியாத சில அந்தரங்க விடயங்களைக்கூட கூச்சமின்றி எதுவித தயக்கமுமின்றி துணிந்து நின்றே கேட்கின்றனர்.

இவ்வாறு தரம்கெட்டுநின்று பகிடிவதை'யில் ஊறித்திளைக்கும் இந்த இளைஞர்கள் தமது உடன்பிறப்புகளோ அல்லது தமது உறவுகளோ இந்தப் பல்கலைக்கழகத்திற்கு வரும்போது சகமாணவர்கள் இப்படியான செயலை செய்யும் போது மனதார ஏற்றுக் கொள்கிறார்களா? நிச்சயமாக இல்லை, அப்படி ஒரு நிலை ஏற்படுகின்ற போதே இவர்கள் அதற்குள் தாமே தலையிட்டு அவர்களை அதிலிருந்து மீட்டுச்செல்வதனை எனது கண்ணூடாக பல சந்தர்ப்பங்களில் கண்டுள்ளேன்.

இக்கால கட்டத்தில்தான் இவர்கள் தமது பாலியல் ரீதியான வக்கிரத்தையும் தீர்க்கின்றனர். ஒருவருடமாக புதிய மாணவிகளின் வருகைக்காகக் காத்திருக்கும் இளைஞர்கள் அவர்கள் வந்ததுமே அவர்களுள் தமது மனதிற்கு ஏற்றவர்களைத் தெரிவு செய்கின்றனர். முதலில் அழகைப் பார்த்து தெரியும் இவர்கள் அவர்களுடன் மட்டும் நெருங்கி அவர்களைத் தனிமைப் படுத்தி குடும்ப விபரங்களை திரட்டிக் கொள்கின்றனர். தன்போது இவர்கள் தெரிவு பொருளாதார வசதியுள்ள பெண்களாகவே இருக்கும் இதனை இங்குள்ள எந்தவொரு மாணவனும் மறுக்க முடியாது.

அழகான பெண்களே அனைத்து இளைஞர்களதும் பகிடிவதைகளுக்கு உட்படுகின்றனர். இவர்களது நோக்கிற்கு அப்பாற்பட்டு விலகி நிற்கும் மாணவிகள் இவர்களது வசைகளுக்குள்ளாகி உடல், உளரீதியாக பெரிதும் பாதிப்பிற்குள்ளாகி விடுகின்றனர். இவர்களதுவசைமொழிகளை வெளிப்படையாக கூறுவது எமது சமூக பண்பாட்டு கலாசாரங்களுக்கு ஒவ்வாதிருக்கின்றமையால் நான் இங்கு கூற விரும்பவில்லை.

களில் கிண்டல் செய்வார்கள். கல்வி வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கவோ குறிப்புகளை வழங்கவோ மாட்டார்கள். புறநடவடிக்கைகளில் ஈடுபட பலவழிகளிலும் இடையூறுகளை மேற்கொள்வர்.

''ராக்கிங்'' என்ற போர்வையில் குளிர்காயும் இவர்களது செயல்கள் நிறுத்தப் படல்வேண்டும் இவர்கள் மேற் கொள்ளும் கலாசார சீரழிவுகளுக்கு பல்கலைக்கழகம் தொடர்ந்தும் துணை போகக்கூடாது. சாதாரணமாக ஒருவரை எவ்வாறு அறிமுகம் செய்து பழகிக் கொள்கின்றோமோ, அதே போல் பழகிக் கொள்வதையே நான் விரும்புகிறேன் என்றார் அம்மாணவன் மருத்துவ பீடத்தில் மிக மோசமாக ராக்கிங் நடப்பதாக கிடைத்த தகவலை அடுத்து விரைந்த நாம் புதிய மாணவன் ஒருவரைச் சந்தித்தோம்.

எமது அண்ணன், அக்காவிற்குச் சமனான இவர்கள இவ்வளவு கீழ்த்தரமாக நடந்து கொள்வார்கள என நான் சிறிதும்எதிர்பார்க்க வில்லை. பல்கலைக் கழக படிப்பை முடித்து வெளியேறும் போது உயர்மட்டங்களுடன் சமுதாயத்தில் மிக உயர்ந்த அந்தஸ்தில் வைத்து பதிக்கப்படும் இவர்களின் உள்ள உணர்வுகளை அந்த ஒருசில நாட்களில் கண்டு வேதனையுற்றேன்,

இவர்கள் தமது சகோதரர்களாக இருந்தால் இப்படி நடந்து கொள்வார்களா என எனக்குள்ளேயே கேட்டுக் கொண்டேன். எமது பெற்றோர் நல்ல முறையில் எம்மைப்படிக்க வைத்து பெரியதொரு இலட்சியத்துடன் வாயைக்கட்டி வயிற்றைக் கட்டி எம்மைப்பல்கலைக்கழகத்திற்கு அனுப்பினார்கள். மானிப்பாயில் எமக்கு ஆங்கில வகுப்பு ஆரம்பமானது. முடியும் வரை காத்திருக்கும் இளைஞர்கள் எம்மை நவாலிப்பகுதியில் உள்ள மதுபானக்கடைக்கு அழைத்துச் சென்று மது வினை வேண்டி தந்து பருகுமாறு பணித்தனர். மறுத்த போது மிரட்டினர். அடிபணியாது போகவே சிலரை பலாத்காரமாக அருந்த வைத்தனர். நிலை தடுமாறி, மயக்கமுற்று, வாந்தி எடுக்குமளவிற்கும் இவர்கள் விட்டு வைப்பதில்லை

மிகவும் மோசமானதும், அருவருக்கத்தக்கதும் ரூம்ராக்

## வக்கிரங்களை தீர்க்க ஓர் ஆயுதம்

புதுமுக மாணவர்களின் பிரவேசத்தின் போது பழைய மாணவர்கள் அவர்களை வரவேற்று தமக்கிடையே புரிந்துணர்வினையும் பரஸ்பர நல்லுறவினையும் ஏற்படுத்திக் கொள்ளும் முகமாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த 'பகிடிவதை'யினை எமது பல்கலைக்கழக மாணவர்களில் பெரும்பாலானவர்கள் தமது உள்ளத்தில் உறைந்து கிடக்கும் எண்ணக் கிடக்கைகளை வெளிப்படுத்துவதற்குக் கிடைத்த சந்தர்ப்பமாகவே கருதிப் பயன்படுத்துகின்றனர்.

என்னைப் பொறுத்தவரையில் இப்படியான ஒரு 'பகிடிவதை' தேவையற்ற ஒன்றா

யாழ் பல்கலைக்கழகத்தில் இருக்கும் மாணவர்கள் ஒத்தோடிகளாகவும் கும்பல் கலாசாரத்தை விரும்புபவர்களாகவுமேயுள்ளனர். இத்தகைய பகிடிவதைகளில் ஈடுபடுவது கௌரவம் என இவர்கள் கருதுகின்றனர். புதிதாக வருபவர்கள் தாம் இம்முறை வாங்கினால் தான் அடுத்த முறை தாமும் கொடுக்கலாம் என்ற சிந்தனையில் உள்ளார்கள்.

இவ்வாறு இவர்களது பகிடிவதையினை ஏற்க மறுப்பவர்கள் இப்பல்கலைச் சமூகத்திலிருந்து ஒதுக்கிவைக்கப்படுகின்றனர். சகமாணவர்கள் கூட பழகுவதில்லை. ஒற்றைறோட்டு, என காணும் இடங்

கிங் என்பது ஆகும். தோப்புக்கரணம் போடுவது பிரதிட்டை பண்ணுவது அங்கு மிக சிறிய செயலாகவே இருக்கும். இதை விட இரு முழங்கைகளையும் சுவரிலே வைத்து சாய்ந்து நிற்குமாறு கூறி விட்டு இரு கால்களையும் இழுத்து விடுவார்கள். முழங்கைகள் இரண்டும் சுவரிலே தேயுண்டவாறு நிலத்தில் விழும். இதனால் முழங்கை சிரட்டைகள் உடைந்து இரத்தம் பெருகும்.

இவர்கள் செய்யும் இத்தகைய காட்டு மிராண்டித் தனத்திற்குப் பெயர் தானா 'ராக்கிங்' இதனை ஒரு வழக்கமாக பல்கலைக்கழகம் தொடர்ந்து

(9 ஆம்பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம்

## சிறுகதை

# மீண்டும் நாளை வருவான்

### மலரன்னை

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த நான் அம்மாவின் குரல் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தேன். ''தம்பி ஆதவன்! என்ன இண்டைக்கு இவ்வளவு நேரமும் நித்திரை கொள்ளுறாய். இண்டைக்கு வகுப்பில்லையே?'' 'இப்ப எத்தினை மணியிருக்கும்' மனதுக்குள் நினைத்தவாறே சோம்பல் முறித்துக் கொண்டு எழும்பிய நான், மேசையிலிருந்த அலாரம் மணிக்கூட்டை நோக்கிப் பார்வையைத் திருப்பினேன்.

நேரம் சரியாக 6-30 ஐக் காட்டியது. மருத்துவ பீட மாணவனாகிய நான், இரவு நீண்ட நேரம் விழித்திருந்து படித்ததினால், என்னையறியாமலே இத்தனை நேரம் தூங்கிவிட்டேன். அவசரமாக எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு அம்மா தந்த கோப்பியைச் சுவைத்தவாறே அன்றைய தினசரியை எடுத்துப் பிரித்தேன். பிரித்ததுதான் தாமதம் என் விழிகள் அசலத் திறந்தவாறு அப்படியே நிலைகுத்தி நின்றுவிட்டன.

அந்தப் பத்திரிகையின் முன்பக்கத்தில் என் ஆருயிர் நண்பன் கண்ணனின் படமல்லவா அது .....

என்னையறியாமலே எனது கண்கள் அதில் பிரசுரிக்கப்பட்டிருந்த தலைப்புச் செய்தியை மேய்ந்தன.

'கிளாலிக் கடலில் கரும்புலித் தாக்குதல்'

நடுங்கும் கரங்களால் பத்திரிகையைப் பிடித்தவாறு, என் கண்ணனை உற்று நோக்குகிறேன். கறுப்புச் சீருடையில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட கறுப்புத்தொப்பியுடன் காட்சியளித்த அவனது கண்களில் தோன்றியது ..... பெருமிதமா?...... இல்லை .. காலனையும் வென்றுவிட்ட கர்வமா? ... அல்லது இலட்சிய வெறியா? ..... என்னால் எதையுமே கிரகிக்க முடியவில்லை.

எனது பார்வை பத்திரிகையின் கீழ்ப்புறத்தைத் தாவியது. அங்கே...... என் ஆருயிர் நண்பன் கண்ணன் பக்திப் பரவசத்தில் தனை மறந்து நிற்கும் ஞானிபோல் எமது தேசியத் தலைவரின் அரவணைப்பில் நின்றான். என் மனத்தில் இனம் புரியாத ஒரு சலனம்... கண்களை இருட்டிக் கொண்டு வரவே, மெதுவாகப் போய் அருகிலிருந்த சோபாவில் அமர்ந்து கொண்டேன். எனது மேனியெங்கும் புல்லரித்து, உடல் சோர்ந்து, விறைத்துப் போவதை என்னால் உணர முடிந்தது. கண்களை இறுக மூடிக்கொண்டேன்.

பள்ளிப்பருவம் பசுஞ்சோலையில் பவனி வந்த அந்த நாட்கள்...... நெஞ்சத்தில் நிறைந்த நினைவுகள்......... இன்னும் பசுமையாய் எனது உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன.

நகரில், பிரபல்யமான அந்தக் கல்லூரியில் ஆண்டு ஒன்பதில் அன்றுதான் நான் காலடி எடுத்து வைக்கிறேன். தயங்கியவாறு படபடக்கும் நெஞ்சத்துடன் வகுப்பறையைச் சுற்றி ஒருதரம் நோட்டமிட்டபோது, கணீரென்ற குரல் ஒன்று கேட்கிறது.

''ஹலோ! நியூசம்மர், உம்முடைய பெயர் என்ன?''

இப்படித்தான் கண்ணன் எனக்கு அறிமுகமாகினான். கல்வியில் மிகுந்த ஆர்வமுடையவனாய்த் திகழ்ந்த அவன் சகமாணவர்களையும் ஊக்குவிப்பான். எனது முன்னேற்றத்திற்கு முக்கிய காரணியாய் இருந்த அவனை எப்படி என்னால் மறக்க முடியும்..?

''ம்!'' நீண்ட பெருமூச்சொன்றுவெளிவருகிறது. ஒரு முறை விம்மித் தணிந்த மார்பைக் கையால் பொத்திப் பிடித்துக் கொள்கிறேன்.

வள வளவென்று எந்நேரமும் ஏதாவது கதை அளந்து கொண்டிருக்கும் அவனது வாய் இப்போது ஓய்ந்து போய் விட்டதா? ..

வார்த்தைகளால் வம்புக்கு இழுத்து, சிலேடையாகப் பேசிச் சாடிவிட்டுப் பின்னர் புன்முறுவல் பூத்து நிற்கும் அந்தப் பொன்மேனி உருக்குலைந்து போய் விட்டதா? ..

ஒரு நாள் அவனுடைய வீட்டிற்குப் போயிருந்த ஞாபகம் எனக்கு இப்போது வருகிறது. வீட்டின முன் அமைந்திருந்த பூந்தோட்டத்தைச் சுட்டிக் காட்டி,

''மச்சான் ஆதவன்! பாத்தியே என்ரை பூந்தோட்டத்தை என்ரை பொழுதுபோக்கு இதுதான்''

பூத்துக் குலுங்கிய பல்வேறு வண்ணப் பூக்களால் நிறைந்திருந்த அந்தப்பூந்தோட்டத்தைப் பார்த்து நான் பிரமித்து நின்றேன். ஒரு சாடிக்குள் வளர்ந்திருந்த றோசாச் செடியின் கிளைகள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு நிறப்பூக்கள் மலர்ந்திருந்தன

''ஆதவன்! இதைப் பார்த்தியே எல்லாம் நானே தான் ஒட்டின நான்''

பெருமையுடன் சொல்லிக் கொண்டாலும் குழந்தைத்தனம் அதில்இழையோடியது.

''கண்ணன்! என்னெண்டு நீ இதைப் பராமரிக்கிறாய்? எனக்கெண்டால் எந்த நேரமும் படிப்பும் ரியூசனுமெண்டு திரியிறதில அலுத்துப் போகுது''

''ஆதவன்! எனக்கெண்டால் ஒரு நிமிசத்தையும் வீணாய்ச் செலவழிக்கிறது பிடிக்காது. எந்தநேரமும் எதையாவது பிரயோசனமாய்ச் செய்து கொண்டிருக்க வேணும். ஓய்வு கிடைக்கிற போதெல்லாம் இந்தத் தோட்டத்துக்குள்ள தான் ஏதும் செய்து கொண்டிருப்பன்''

ஆம் அவன் அன்று சொன்ன வார்த்தைகள் உண்மையானதுதான் அவன் அதைச்செயலிலும் நிரூபித்துக்காட்டி விட்டான் தன்வாழ்வின் கடைசி நிமிடத்தையும் பயனுள்ளதாக்கி, ஒரு மாபெரும் சாதனையைநிலை நாட்டி விட்டுப் போய்விட்டான்.

நாங்கள் ஏ. எல் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருந்த காலப்பகுதி அது ஓ. எல் பரீட்சையில் எட்டுப்பாடங்களிலும் அதிவிசேடசித்திபெற்று எங்கள் கல்லூரியிலேயே முதன்மையாக விளங்கிய கண்ணன் மீது அதிபரும், ஆசிரியர்களும் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர். அந்தச் சமயத்தில்தான் ஸ்ரீலங்கா அரசுடனான இரண்டாவது யுத்தம் மூண்டது, யாழ். கோட்டை விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குட்பட்டிருந்த அந்த நாட்களில் பொம்மர்களும் உலங்கு வானூர்திகளும் வானில் பறந்து குண்டுகளை வீசி எம் மக்களை அச்சுறுத்திக் கொண்டிருந்தன.

எனக்கு வீட்டில் பலத்த கட்டுப்பாடு. வீட்டை விட்டு வெளியே போக அம்மா அனுமதிக்கமாட்டாள். ஒரு நாள் மாலைப் பொழுதில் கண்ணனின் அப்பா என்னைத்தேடி வந்தார்.

''இவன் கண்ணன் வந்தவனே தம்பி?''

''இல்லை அங்கிள், ரியூசன்கள் நிற்பாட்டின பிறகு நான் அவரைச் சந்திக்கவே இல்லை. அம்மா வீட்டை விட்டு வெளிக்கிட விடுறதில்லை. அதாலதான் நான் வீட்டையும் வரயில்லை''...

''இல்லைத் தம்பி. கண்ணனைக் காலையில இருந்து காணேல்ல. எப்படியும் மத்தியானம் சாப்பிட வீட்டை வந்திடுறவன். அவனுக்குத் தெரியும் தான் சாப்பிடாட்டில் அம்மாவும் சாப்பிட மாட்டா எண்டு ஏனோ... இன்னும் காணேயில்லை. எதுக்கும் விசாரிச்சுப் பாப்பம்''

சொல்லிவிட்டுப் போய்விட்டார் அவர்.

சில நாட்களின் பின் அவன் இயக்கத்துடன் இணைந்து விட்டதாகக் கதை பரவியது என் உள்ளத்தில் ஓர் அரிப்பு

ஏன் அவன் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டான்? வகுப்பில் முதல் மாணவனாக ஆசிரியர்களே வியக்கும் வண்ணம் கல்வியில் ஒரு வித்தகனாகவே விளங்கி.வந்த கண்ணன் எப்படிக் கல்வியை மறக்கத் துணிந்தான்?

இந்தக் கேள்விக்கு என்னால் விடைகாண முடியவில்லை. நாட்கள் நகர்ந்தன பாடசாலைகள் வழமையாய் இயங்கத் தொடங்கின. நான் படிப்பில் கவனத்தைச் செலுத்த முற்பட்டாலும் கூட, அடிக்கடி கண்ணனின் நினைவு வந்து என்னை அலைக்கழிக்கும். மாணவர்கள் நாங்கள் ஒன்றுகூடி ஒரு பாடத்தை பயிலும் போது சிக்கலான ஒரு வினாவுக்கு விடையைத் தேடும் சமயம் கண்ணனின் பெயர் அடிபடும்.

எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் குறிப்பிட்ட திகதியிலிருந்து ஏழு மாதங்கள் பின்போடப் பட்டு ஒருவாறு ஏ. எல். பர்ட்சையும் நடந்து முடிந்தது. நான் ஒரு மங்கிய மாலைப் பொழுதில், கோயில் வீதியால் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தேன்.

'என்னடாப்பா! எப்படிப் போகுது. எக்ஸாம் எல்லாம் வடிவாய்ச்செய்தியோ?'' கண்ணனுக்கே சொந்தமான அந்தக் கணீரென்ற குரல் கேட்டு நான் திடுக்கிட்டவனாய் திரும்பிப் பார்த்தேன்.

கண்ணன்தான் சைக்கிளை விட்டிறங்கி என்னிடப் வந்து கொண்டிருந்தான். இருவரும் சிறிது நேரம் மனம் விட்டுப் பேசினோம். எனது மனதில் உறுத்திக் கொண்டிருந்த அந்தக் கேள்வியை நான் அவனிடம் கேட்டேன்.

''கண்ணன்! ஏன் நீ இப்பிடியொரு முடிவுக்கு வந்த நீ எங்கட பிரின்சிப்பலும், ரீச்சர்ஸ்களும் கூடச் சரியாய்க் கவலைப்பட்டவை. அவை உன்னிலை வைச்சிருந்த ஹோப், எல்லாத்தையும் வீணாக்கிப் போட்டியே?''

அங்கலாய்ப்புடன் சொன்னேன். புன்சிரிப்பொன்றை உதிர்த்தான் அவன்.

''மச்சான்! நீ என்னைப் புரிஞ்சு கொள்ளாதபடியால் தான் இப்பிடிக் கேக்கிறாய்.

கோட்டைப் பிரச்சினை நடந்த அந்த நாட்களில சகடை போட்ட குண்டிலை எங்கடை கிளாஸ்மேற் ரகுவின்ரை தம்பி உருக்குலைஞ்சு செத்தது உனக்கு ஞாபகமிருக்குதே?''

''ஓ!... அந்த நாட்களில அம்மா என்னை வீட்டை விட்டு வெளியில போக விடுறதில்லை. அதுதான் நான் ரகு வீட்டை செத்த வீட்டிற்குக் கூடப் போகேல்ல''

''என்ன ஆளடாப்பா நீ. நான் அங்கை போனபோது, அந்தப்பிள்ளையின்ரை 'பொடி' வைச்சிருந்த பெட்டிக்கு மேல விழுந்து அவயின்ரை அம்மாவும், அக்காமாரும் அழுததை நேரில பாத்தன். என்ரை மனதில ஒரு விறைப்பு இரணடு நாளாய் இருந்தது யோசிச்சுப் பார்த்தன்.

'அடிமைத் தனத்திற்கு மூலம் கொடுங்கோலனுடைய பலம் அல்ல,

அடிமையவன் கோழைத் தனம்'

இந்த வரிகள் எனக்கு ஞாபகம் வந்தது. உறுதியான ஒரு முடிவை எடுத்துக்கொண்டன். அவ்வளவுதான்

அவனது வார்த்தைகளில் எனது கோழைத்தனம் சுட்டிக் காட்டப்படுவது போல் எனக்குத தோன்றியது. சிறிது நேரத்தில் என்னிடம் விடை பெற்றுக் கொண்டான்.

மீண்டும் ஒரு முறை அவனைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. எங்களுடன் மருத்துவ பீடத்தில் பயிலும் தென் தமிழீழ நண்பர்கள் சிலரை வழியனுப்புவதற்காகக் கிளாலித் துறைமுகத்திற்குப் போயிருந்தோம்.

திடீரென்று யாரோ என் தோளில் தொட்டதை உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பினேன்.

என் பால்ய நண்பன் ..... கண்ணன் சிரித்தவாறு நின்று கொண்டிருந்தான்.

''என்னடாப்பா! அங்காலை போகப் போறியே?''

''இல்லை மச்சான். என்ரை பாட்ச்மேற்ஸ் வக்கேசனுக்கு அங்காலை போகப் போகினம் அது தான் வழியனுப்ப வந்த நான்''

அவனுக்கு எனது நண்பர்களை ஒவ்வொருவராக அறிமுகம் செய்தேன்.

மிகுந்தஅக்கறையுடன் அவர்களைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டான், நீண்டநாட் பழகியவன் போல் அவர்களுடன் சகஜமாக உரையாடினான். என்னிடம் படிப்பைப்பற்றியும் விசாரிக்கத் தவறவில்லை. நானும் அவனைப்பற்றி அறிய விரும்பினேன். ''கண்ணன் இப்ப நீ இஞ்சையே நிக்கிறாய்''

'ஆதவன், போன வருசம் கிளாலிக் கடலுக்குள்ள வைச்சு நேவி செய்த அட்டூழியங்கள் கொஞ்சமே. நீயும் அறிந்திருப்பாய்தானே. எனக்கு அவர்களுக்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும் என்ற கொதிப்பு மனதிற்குள்ளே உண்டு!!

சொன்னவன் சில நிமிட நேரம் கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் திடீரெனச் சொன்னான்.

''நிச்சயமாய் இந்தக்கடல் எங்கடை ஆதிக்கத்துக்கை வரும். அப்ப .. எங்கடை மக்கள் சுதந்திரமாக இந்தக் கடலில உலா வருவினம்''

ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் தனது பாண்ட்பைக்குள் கையை விட்டு ஒரு டைரியை எடுத்து என்னிடம் தந்தான்.

''மச்சான் ஆதவன்! உனக்குத் தெரியும்தானே. என்னாலை ஒரு நொடியும் சும்மா இருக்க ஏலாதெண்டு எனக்கு நேரம்கிடைச்சபே தெல்லாம் என்ர மன உணர்வுகளைக் கவிதையாய் எழுதி வைச்சிருக்கிறன். உனக்கு நேரம் கிடைக்கைக்கவாசிச்சுப் பார். என்ன!...

வள்ளங்கள் புறப்படும் நேரம் நெருங்கி விட்டதால் பாதுகாப்பு வழங்கும் பொறுப்புக்களைக் கவனிக்க வேண்டியிருப்பதாகக்கூறி, எம்மிடமிருந்து விடைபெற்றுக் கொண்டான்.

அவன் போன பின் நான் எனது நண்பர்களுக்கு அவனது கதையைக்கூறினேன். அவர்கள் ஆச்சரியத்தால் வாயடைத்துப் போய் நின்றார்கள்.

இப்போது எனது சிந்தையில் அவனது டைரியின் நினைவு வரவே, என் உணர்வலைகள் சுயநினைவைப் பெறுகின்றன. எழுந்து போய் எனது மேசை லாச்சிக்குள் பத்திரமாக வைத்திருந்த அந்த டைரியை எடுத்து வந்து பக்கத்தைப் புரட்டுகிறேன். முதற்பக்கத்தில் அவனது முத்தான கையெழுத்தினால் சிலவரிகளைப் பதிவு செய்திருந்தான்.

''உயரிய கொள்கைக் காக தமது வாழ்வை அர்ப்பணிக்கத் துணியாத நபர் வாழ்வதற்கே தகுதியற்றவர்'

தனது தாயகத்தை மீட்டிடவேண்டுமென்ற உயர்ந்த கொள்கைக்காகத் தனது வாழ்வை மட்டுமல்ல, உயிர், உடல் அனைத்தையுமே அர்ப்பணித்து விட்டஅந்தத் தியாகிய எண்ணி என் மனம் ஏங்கித் தவிக்கிறது ஒருகணம், மறுகணமே என்னுள் ஓர் நம்பிக்கை துளிர்க்கிறது. தாயகக் கனவைத் தன் நெஞ்சினில் சுமந்து, தாயகத்தின் விடிவுக்காய் தன் இறுதி மூச்சை வெப்பமாய் உமிழ்ந்து எதிரியை அத்தீயினால் சுட்டுப் பொசுக்கித் தமிழீழ வரலாற்றில் மாபெரும் சாதனை படைத்துவிட்ட அந்த மாவீரனது ஆன்மா, தாயகத்தை மீட்கும் வரை ஓயாது. தணியாத இலட்சிய வேட்கையுடன், தாயக மீட்பில் பங்கேற்க மீண்டும் நாளை உருவெடுக்கும். இது நிச்சயம்.

## பெண்களுக்கான
# வேலைவாய்ப்பு

தமிழீழப்பெண்கள் தொடர்பான சமூக ஆய்வினை மேற்கொண்டு வரும் நிறுவனம் ஒன்றில் பணிபுரிய பெண்கள் தேவை.

வயதெல்லை:- 19 தொடக்கம் 30 வரை

தகைமை:- ஆகக்குறைந்த தகைமையாக க.பொ.த. உயர்தரத்தில் 03 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். புள்ளி விபரம் திரட்டுதலில் தேர்ச்சி பெற்றிருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பது விரும்பத்தக்கது,

விபரங்கள் நேரில்:-

**விண்ணப்ப முடிவுத்திகதி:- 12-7-1994**

வி. இல. 338
மே/பா ஈழநாதம் பணிமனை
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9773)

---

## அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச்சங்கம்
வரையுள்ளது.
## வட்டுக்கோட்டை
# 36-வது ஆண்டுப் பொதுக்கூட்டம்
**10.07.1994 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி**

மேற்படி சங்கத்தின் 36 வது ஆண்டுப் பொதுக்கூட்டம் 10-7-1994-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சித்தன்கேணியில் அமைந்துள்ள வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மண்டபத்தில் சங்கத்தலைவர் த. மு. கதிர்காமநாதன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

ஒழுங்காக அங்கத்துவ சகாயம் கட்டுபவர்களுக்கு தனிப்பட்ட அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அங்கத்தவர் நலன் கருதி இவ் அறிவித்தலும் வெளியிடப்படுகின்றது.

சங்கச் சேவையில்
கௌரவ செயலாளர்
பொதுமுகாமையாளர்

(சி-9770)

---

உ
சிவமயம்

## திருமண வைரவிழா, எண்பத்தைந்தாவது
# பிறந்ததினவிழா அழைப்பிதழ்

**அன்புடையீர்,**

நிகழும் பவ வருடம் ஆனித்திங்கள் 25-ம் நாள் சனிக்கிழமை (9-07-94) பிற்பகல் 2 மணியளவில் வரும் சுபநேரத்தில் எமது பெற்றோர் தெல்லிப்பழை கிழக்குஇயாமாவளவைச் சேர்ந்த

**திரு. திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி**
(இளைப்பாறிய ஆசிரியர் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை, மகாஜனாக் கல்லூரி)

**திருமதி தையல்நாயகி** தம்பதிகளின்
திருமண வைர விழாவினையும்
எமது தந்தையாரின்
எண்பத்தைந்தாவது பிறந்த தின விழாவினையும்

கொண்டாடத் திருவருள் பாலித்திருப்பதனால் தாங்களும் குடும்ப சமேதராய் அத்தருணம் வருகை தந்து திருமண வைரவிழாக்காணும் தம்பதியினரை வாழ்த்தி அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெற்றுத்தொடர்ந்து நடைபெறும் தேநீர் விருந்துபசாரத்திலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ தயவுசெய்து இவ்வழைப்பிதழைத் தனித்தனி அழைப்பிதழாக ஏற்குமாறு வேண்டுகின்றோம்.

மாஸ்டர் கராஜ்
உரும்பராய்சந்தி,
உரும்பராய். (8725)

தங்கள் நல்வரவை நாடும்
வைரவிழாக்காணும் தம்பதியினரின்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

---

# போட்டோ அல்பம் இனாம்

★ கலர் பிலிம் சுருள்களை கழுவி படமாக்கி 30 பிரதிகள் பெற்றால் ஒரு போட்டோ அல்பம் இனாம்
★ போட்டோ பிளேற் (PHOTO PLATE) கலர் படங்களை கோப்பைகளில் பதித்தல் (சாம்பிள் பார்வையிடலாம்)
★ கொம்யூட்டர் றபர்சீல் (COMPUTER RUBBER STAMPS) (இரண்டு வருட உத்தரவாதம்)
★ லயின், காவ்ரோன், கலர் புளொக்ஸ் (Line, Half Tone, Colour Blocks)
★ புகைப்பட பிரதியாக்கம் (RE-COPY) மேல் குறிப்பிட்டவற்றைக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

# (-) கொழும்பு கலைக்கூடம் (-)
(கொழும்பு ஸ்ருடியோ)

**55, லெப். இளங்கோ வீதி, யாழ்ப்பாணம்.**

**தொழில் நுட்பத்தில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர்கள்**

(சி-9775)

---

# தமிழீழ வைப்பகம்

உங்களுக்காகவே உருவான வைப்பகம் தந்திடும் பணியில் தன்னிறைவடைவீர்
உற்றுப் பாரீர் உள்ளே வாரீர்
விளக்கக் குறிப்பைப் பார்த்து வியப்பிலே விழிகள்விரிப்பீர்

### தேட்டக் (சேமிப்பு) கணக்கு

ஆகக் குறைந்தது 200/- உருபாவுடன் கணக்குத் தொடங்கலாம். பின்னர் 50/- உருபாவிற்குக் குறையாத தொகையை வைப்பிலிடலாம். ஒவ்வொரு காலாண்டிலும் இருக்கும் ஆகக்குறைந்த நிலுவையில் 14% வட்டி வழங்கப்படும்.

கணக்கிலிருந்து ஏழலக்கொருமுறை (வாரமொருமுறை) பணத்தை மீளப்பெறலாம்.

### நிலையான வைப்பு

2,000/- உருபாவிற்குக் குறையாத எத்தொகையையும் நிலையான வைப்பிலிடலாம்.

| | | |
|---|---|---|
| முதிர்வில் வட்டி- | 06 மாத வைப்பு | 15% |
| | 01 ஆண்டு வைப்பு | 16% |
| | 02 ஆண்டு வைப்பு | 17.5% |

### மாத வட்டி

10,000/- உருபாவிற்குக் குறையாத ஓராண்டு நிலையான வைப்புகளுக்கு 15% மாத வட்டி வழங்கப்படும்.

★ நிலையான வைப்புகளிலிருந்து தேவைப்படின் முதிர்வின்முன்பு முழுத்தொகையையும் மீளப்பெறலாம். விளக்கங்களுக்கு வைப்பகத்தை நாடவும்.

### 7 நாள் அறிவித்தலில் மீளும் வைப்பு

25,000/- உருபாவிற்குக் குறையாத எத்தொகையையும் வைப்பிலிடலாம். 7 நாள முன்னறிவித்தல் கொடுத்து 10% வட்டியுடன் மீளப்பெறலாம்.

### நடைமுறைக் கணக்கு

நடைமுறைக் கணக்குகள் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

### கடன் வாய்ப்புகள்

1. நிலையான வைப்பு, தேட்டக் கணக்கு மீதிகளுக்கு எதிரானகடன்
2. அடகுக் கடன்
3. வாணிபக் கடன்
4. மேம்பாட்டுக் கடன்

### கடன் வட்டிக் கூறுகள்

வைப்பு வட்டியிலும் 2% கூடுதல்
30% (மாத வட்டி $2\frac{1}{2}$)
30% (மாத வட்டி $2\frac{1}{2}$)
நோக்கத்தின் அடிப்படையில் 24% முதல் 27% வரை

தமிழீழ வைப்பகத்தில் முதலீடு செய்யுங்கள்.....

★ உங்களின் எதிர்காலம் வளமாக மாறும் ★ நாடும் வீடும் பொருண்மிய வலுப்பெறும்
★ தமிழரின் வியர்வைத் தேட்டம், தாயகத்தை அழகுத் தோட்டமாக்கும்.

எங்களின் குறிக்கோள் உங்களின் உயர்வே
வழமையாளராகித் தழைத்து உயர்வீர் தாயகத்தை உயர வைப்பீர்

## தமிழரின் காப்பகம் தமிழீழ வைப்பகம்

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (சி-9769) தமிழீழ வைப்பகம்

யாழ்ப்பாணம்

# சிறிலங்காவின் ஜனநாயக அரசியலில் தமிழ் மக்களின் அனுபவங்கள்

மக்களை மக்களால் மக்களே ஆளும் ஆட்சி அமைப்புத்தான் ஜனநாயகம் என்று அரசியல் கோட்பாடுகளில் வரையறை செய்யப்படுவது தெரிந்ததே. ஆனால், சிறிலங்காவின் ஜனநாயக அரசியல் அரங்கில் தமிழ் மக்களின் அனுபவங்கள் வித்தியாசமானவை மட்டுமல்ல விசித்திரமானவையும் ஆகும் எண்ணிக்கையில் பெரும்பான்மை என்ற பலத்தைக்காட்டி ஒரு தேசிய இனத்தின் தனித்துவத்தை சிதைக்கும் முயற்சிகளுக்கு சட்டரீதியான அங்கீகாரம் வழங்குவதே சிறிலங்கா பாராளுமன்ற ஜனநாயக அரசியலில் தமிழ் மக்களின் அனுபவம் என்பது மிகவும் வெளிப்படையானது.

சிறிலங்காவின் ஒன்பதாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பத்தாவது பாராளுமன்றத்திற்கான உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டு விடவேண்டும் என்ற ஆவலில் அரசியல் வாதிகள் பலரும் அலையும் இத்தருணத்தில் தமிழ் மக்களின் இந்த அனுபவங்களை மீட்டுப் பார்ப்பது பொருத்தமானதாக இருக்கலாம். சிறிலங்காவின் ஒற்றையாட்சி, இறைமை, தேசிய ஒருமைப்பாடு என்ற சொற்பதங்கள் யாவும் தமிழ் மக்களை அடிமைகளாகவும், இரண்டாம் தரப் பிரஜைகளாகவும் கருதும் தன்மையையே அடிப்படையாகக்கொண்டவை என்பது ஒன்றும் இரகசியமானது அல்ல.

## முதல் அனுபவம்

பிரிட்டிசார் விட்டுச் சென்ற பின்னர் கூடிய முதலாவது பாராளுமன்றமே பத்து லட்சத்திற்கும் அதிகமான மலையக தமிழ் மக்களின் வாக்குரிமைகளைப் பறித்தது என்பது இலகுவில் மறந்து விடக் கூடியதல்ல. தமிழ் மக்களின் வாக்குரிமையைப் பறித்து தமிழ் மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை மறுத்த அதே சிறிலங்கா பாராளுமன்றத்தில் இதன் மூலம் சிங்கள மக்கள் தமது விகிதாசாரத்திற்கு அதிகமான பிரதிநிதிகள் இடம் பெறவும் வழியேற்பட்டது. பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்களை, அரசியல் அநாதைகளை இந்தச் செயல் ஜனநாயக முலாம் பூசி மறைக்கப்பட்டதும், கனவான் தனமாக அரசியல் பேசிய வித்தகர்கள் கைகளைப் பிசைந்து கொண்டு வெளியேற வேண்டி ஏற்பட்டதும் நினைவுகளை விட்டு இலகுவில் துடைத்து விடக் கூடியதல்ல.

## உணர்ச்சிகளைக் கிளறும் களமாகவே

உணர்ச்சிகளைத்தூண்டிவிட்டு பெரும்பான்மை வாக்குகளைக் குவிப்பதன்மூலம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைப் பெற்று அதிகாரப் பீடம் ஏறிக் கொள்வதற்காக சிறிலங்காவின் ஜனநாயக அரசியல்வாதிகள் பலரும் இனவாதத்தையே தமது ஆயுதமாக பயன்படுத்தியுள்ளனர். பௌத்த சிங்கள பேரினவாதத்தைக் கக்குவதன் மூலம் தமிழர்களை எதிரிகளாகக் காட்டுவதும், தமிழ் மக்களின் சொத்து உடைமை, நிலம் என்பவற்றைச் சுவீகரம் செய்வதுமே பேரினவாதிகளின் இனவெறி இலக்காக இருந்துள்ளது. இதன் ஒரு கட்டம் 1956 தேர்தலின் போது அப்பட்டமாக அம்பலமாகியது. 24 மணி நேரத்தில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்படும் என்ற உறுதிமொழியுடன் விதைக்கப்பட்ட இனவாத வித்து 1958-ல் இனவெறியாகி தமிழ்மக்களைக் குறிவைத்து படுகொலை செய்தது வரலாற்றின் பக்கங்களில் பசுமையாகவே இருக்கிறது.

இவைகள் தான்கடந்தகால சம்பவங்கள் என்று விட்டாலும், அண்மைக்கால அனுபவங்கள் கூட ஒன்றும் விருப்புக்குரியதாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. எழுபதுகளில் சுதந்திரக்கட்சி தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி கொண்டு வந்த புதிய அரசியலமைப்புத் திட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைக் காட்டுவதற்காக எஸ் ஜே.வி. செல்வநாயகம் தமது பதவியைத் துறந்தபோது சுமார் நான்காண்டுகள் வரை காங்கேசன்துறைத்தொகுதிக்கான இடைத்தேர்தல் நடத்தப்படவில்லை. ஆனால் 1975இல் அப்போதைய பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் நீடிப்பதற்கு எதிராக கொழும்பு தெற்கு தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ஜே. ஆர். ஜெயவர்த்தனா

**இளையவன்**

துறந்தபோது உடனடியாகவே இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. அதாவது சிறிலங்காவின் ஜனநாயக அரசியல் சிங்களவர்களுக்கு சாதகமானதாகவும்- தமிழர்களுக்கு எதிரானதாகவும் செயற்படுகின்றது என்பதைக் காட்டும் ஒருவகை மாதிரியான உதாரணமாக இதனைக் கூற முடியும்.

## ஜனநாயக ரீதியில் வெளியான வேணவா

இன்னும் 1977-ன் பொதுத் தேர்தலின் முடிவின் மூலம் தமிழ்மக்கள் தமது அபிலாசையை-வேணவாவை மிகவும் துல்லியமாக வெளிப்படுத்தினர். ஆனால் அந்த ஜனநாயக முடிவை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக அப்போது பிரதமராக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா ''போர் என்றால் போர்'' முழங்கியதுடன் இராணுவ ரீதியாகத் தமிழ் மக்களை அடக்கிவிட முற்பட்டதன் விளைவுதான் இன்று வரை நீடிக்கும் யுத்தம். இந்த யுத்தத்தைத் தொடர்ந்து நீடிப்பதற்கும், இந்த யுத்தத்திற்கு சட்டபூர்வ அங்கீகாரம் அளிக்கும் நிறுவனமாகவும் தான் சிறிலங்காவின் பாராளுமன்றம் இருக்கின்றது என்பதே யதார்த்தமாகும். தேர்தல் முறையையும், சிறிலங்கா பாராளுமன்றத்தையும் ஏற்றுக்கொள்வதில் தயக்கம் இருக்கின்றபோதும் கூட தமிழ்மக்கள் தமது தனியரசிற்கான வேணவாவை இத்தேர்தல் மூலம் வெளியிட்டதைக் குறிப்பிட்டுத்தானாக வேண்டும்

இன்னும் 1977 பொதுத் தேர்தல் முடிவின் மூலம் எதிர்பாராதவிதமாக தமிழர்கள் எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றபோதும் கூட எதிர்க் கட்சிக்கு உரியகௌரவமோ, அந்தஸ்தோ அவர்களுக்குக் கிட்டியிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். உலகிலேயே எந்தப் பாராளுமன்றத்திலும் இதுவரை நடந்தேறியிராத வகையில் எதிர்க்கட்சித் தலைவர் - அவர் ஒரு தமிழர் என்பதற்காக - நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றியதும் சிறிலங்காவின் பாராளுமன்றம்தான்.

சர்வசன வாக்கெடுப்பு என்ற போலி நாடகத்தின் மூலம் சிறிலங்கா பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் 1982 இல் நீடிக்கப்பட்டது. ஜனநாயக அரசியலில் மற்றுமொரு கேலிக் கூத்து ஆகும். இவ்வாறு எல்லாம் ஜனநாயகக் கோட்பாடுகளையும், மக்களாட்சித் தத்துவத்தையும் தமக்கு ஏறற விதத்தில் எல்லாம் வளைத்தும் நெளித்தும் பயன்படுத்திய தமிழ் மக்களை ஜனநாயக விரோதிகளாகக் காட்ட விழைவது தான் மிகவும் விந்தையானது.

## 6ஆவது திருத்தம்

இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல அமைந்தது 1983இல் நிறைவேற்றப்பட்ட 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பிற்கான ஆறாவது திருத்தச் சட்டம் ஆகும். தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியாக வெளிப்படுத்திய வேணவாவிற்கு எதிராகப் பிரகடனம் செய்தாலேயேசிறிலங்காப் பாராளுமன்றத்தில் இடம் பிடிக்க முடியும் என்ற நிலையை ஏற்படுத்திய இச் சட்டம் தமிழ்மக்களின் பிரதிநிதிகளை பாராளுமன்றத்திலிருந்து கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியது.

1989 பொதுத் தேர்தல் முடிவின் மூலமும் கூட பெரும்பான்மையான தமிழ்மக்களின் வேணவாவும்- அபிலாசையும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. தமக்கென தனியரசு ஒன்றை நிறுவிக் கொள்வது தான் தமிழ் மக்களின் அடிப்படையான வேணவா என்பது மிகத் துல்லியமாக ஜனநாயக ரீதியாக வெளியிடப்பட்டிருந்தது ஆனால் இதனை எல்லாம் ஏறெடுத்தும் பார்க்காத நிலையில் தேர்தலில் போட்டியிடுவது மட்டும் தான் ஜனநாயகம் என்றே சிறிலங்கா சித்தரித்துக் கொள்கிறது. இவ்வாறு சித்தரிப்பதுமூலம்தமிழ் மக்களை ஜனநாயகத்தின் எதிரிகள் போலக் காட்ட முயற்சிக்கப்படுகிறது ஆனால் சிங்களப் பேரினவாதிகளின் இந்த இலக்கு நிறைவேறப் போவதில்லை என்பது மட்டும் உறுதி.

---

## எமது சமுதாயத்தை

அனுமதித்து வருவது தமிழர்களிற்கான அவமான செயலாகவேக ருதுகிறேன் என்கிறார் அந்த மருத்துவ பீட புதிய ஆண்டு மாணவன்.

இனி மாணவர் தரப்பை நிறுத்திக் கொண்டு இம் மாணவர்களுக்கு ஆசானாக இருந்து வரும் விரிவுரையாளர்களை அணுகி இது பற்றி கேட்டறியலாம் என்ற எண்ணம் மனதில் உதிக்கவே ஒரு விரிவுரையாளரை அணுகினோம். அவர் கூட தனது பெயரை வெளியிட வேண்டாம் என்ற கண்டிப்பான உத்தரவை முதலில் கொடுத்து, நாம் அதற்கு ஒப்புதல் கொடுத்த பின்புதான் பேசத் தொடங்கினார்.

ஐரோப்பிய நாடுகள் இன்று போல் அல்லாது ஒன்றுபட்டிருந்த காலத்தில் அங்கு பல்கலைக்கழகம் தோன்றியது. அப்போ அங்கு பல்வேறு பாகங்களிலும் இருந்து வந்த மாணவர்களே காணப்பட்டனர். இவர்களிடையே கலை, கலாசாரபழக்க வழக்கங்களில் பெரும் வேறுபாடுகள் காணப்பட்டன. இந் நிலையில் அவர்களுக்கிடையே புரிந்துணர்வையும் நட்பினையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு ஓர் அறிமுகம் தேவைப்பட்டது. அந்த அறிமுகமே ''பகிடிவதையாக'' மாறியது.

சுமுக உறவினை மாணவரிடையே பேணுவதற்கென ஆரம்பித்த இது இன்று பகிடிவதை என்ற ரீதியில் விஷ்வரூபம் எடுத்துள்ளது.

பிரித்தானியரால் எமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட எத்தனையோ விடயங்கள் இன்று எம்மவர்களால் கைவிடப்பட்ட போதிலும் எமது சமூகத்திற்கு ஒவ்வாத இந்த 'ராக்கிங்' மட்டும் நிலைத்து நிற்பது வேதனைக்குரியது என்றார்.

நேரம் மாலை நாலுமணியை நெருங்கிக் கொண்டிருந்ததால் இறுதியாக பல்கலைக்கழக துணைவேந்தரைச் சந்தித்து அவரது கருத்தையும் இணைத்துஆக்கத்தைநிறைவு பெற வைப்பதற்காக அவரது அறையினுள் முன் அனுமதியுடன் புகுந்து கொண்டோம். புன்னகையுடன் வரவேற்று எமது நோக்கைப் புரிந்து கொண்ட அவர்? இந்த ராக்கிங் உடனடியாகவே நிறுத்தப்படவேண்டிய ஒன்றுதான். இதனைத் தொடர்ந்து செய்வதற்கு ஒரு போதும் அனுமதிக்க மாட்டேன். புதுமுக மாணவர்கள் பலர் 'ராக்கிங்' எனும் பெயரில் தம்மீது இழைக்கப்படும் இன்னல்கள் குறித்து மொட்டைக் கடிதங்களாக எனக்கு அனுப்பியுள்ளனர். ஆனால் இவர்கள் தம்மைத்துன்புறுத்துவோரை நேரடியாக இனம் காட்டத் தயங்குகின்றனர். இதனால் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. யாராவது முன்வந்து நிரூபிப்பார்களானால் கடுமையான தண்டனை விதிக்கக் கூட நான் தயங்கமாட்டேன்.

பல்கலைக்கழக வளவிற்குள் நடக்கும் 'ராக்கிங்' ஐக் கட்டுப் படுத்தும் போது அவர்கள் அதனை வெளியிடங்களில் நடத்து கின்றனர். இவ்வாறு வெளியிடங்களில் வைத்து 'ராக்கிங்' செய்வதை எம்மால் தடுக்க முடியாது. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் இல்லாதொழிப்பதற்கும் அனைத்துப் பொதுமக்களும் பொது ஸ்தாபனங்களும், அமைப்புக்களும் முன் வர வேண்டும். பெற்றோர் விழிப்பாக இருக்கும் பட்சத்தில் இவர்களால் எதுவுமே செய்ய முடியாது.

வாழையடி வாழையாக வரும் இந்த ராக்கிங் கொடுமையை ஒழிப்பது புதுமுக மாணவர்களின் கைகளிலேயே உள்ளது. இவர்கள் தாமாகவே உணர்ந்து தம்மைப் போல் பிறரையும் நினைத்து தமக்கு ஏற்பட்ட இந்தக் கொடுமைகள் இனிவரப் போகின்றவர்களுக்கும் ஏற்படக் கூடாது என்பதை உளப்பூர்வமாக உணர்ந்து நாம் இனி மேல் ராக்கிங்கில் ஈடுபடமாட்டோம் என மனதில் உறுதி எடுத்துக் கொள்வார்களேயானால் ஒருசில ஆண்டுகளில் இதனை முற்றாக ஒழித்துவிடலாம் என்ற நம்பிக்கை எனக்குண்டு என்றார்.

---

## வளர்ச்சிப் பாதையில்

இன்றைய நிலையில் இன்னும் வளரும் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு.

ஒரு ஓவியத்தை ஆக்கும் போது உங்களது மன உந்துதல், வெளிப்பாடு எப்படியிருக்கும் என்றபோது,

நான் முன்னரே குறிப்பிட்டது போல் எனது பார்வையையே நான் ஓவியமாக்குகிறேன். கூடுதலாக அவல உணர்ச்சி, இன்றைய நிலையில் மக்களின் உணர்வுகள் என்னுள் கூடுதலாக வெளிப்படுகின்றன. சாதாரண காகிதத்தில் கூட கலைப்படைப்பை உருவாக்க முடியும் என பதில் தந்தார்.

நவீன ஓவிய மரபில் சிற்பங்களும் அடங்குமா என வினாவியபோது,

சிற்பங்களும் நவீன மரபில் உருவாக்கப்படுகின்றன சாதாரணமாக கிடைக்கும் பொருட்களில் நவீனமரபில் சிற்பங்களைச் சித்தரிக்க முடியும் என அழகிய கலைப்படைப்புக்களையும் காண்பித்தார் மாற்கு

எப்படி இந்த நவீன மரபினை மக்களுக்கு கொண்டு செல்ல முடியும் என்பதற்கு, நாளாவட்டத்தில் மக்கள் இவற்றை நிச்சயம் உணர்ந்து கிரகிப்பார்கள். இன்று சஞ்சிகைகளில் வெளிவருவது போல், ஓவியக் கண்காட்சிகளினூடாகவும், இந்த மரபை மக்களுக்கு புரிய வைக்க முடியும்.

இதேவேளை மரபுரீதியான ஓவியப் படைப்புக்களை ஒதுக்க வேண்டுமென்பது பொருந்தாது எமது பாரம்பரியத்தை அழியவிடாத நேரம் புதுமைகளையும் படைக்க வேண்டும் என்பதே என்அவாவாகும் என்றுதொடர்ந்தார்

உங்களுடைய படைப்புகளுக்கு எந்தளவில் அங்கீகாரம் கிடைத்திருக்கிறது?

யாழ்ப்பாணத்திலும் வெளியிலும் எனது படைப்புக்கள் சென்றிருக்கின்றன. 1957இல் இளம் ஓவியர்கள் என்ற தலைப்பில் எனது ஓவியமொன்று ஒப்சேவர் ஓவியங்களில் இடம் பெற்றது. அதே ஆண்டு கலாபவனத்தில் நடந்த இலங்கை பூராவும் ஓவியப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றேன். முதலிடம் எனது விரிவுரையாளருக்கு கிடைத்தது. வெளிநாடுகளிலும் எனது ஓவியங்கள் பாராட்டைப் பெற்றுள்ளன. தமிழ் நாட்டிலும் எனது ஓவியங்கள், சந்தானம், ஆதிமூலம் ஆகியோர் மூலம் பாராட்டைப் பெற்றுள்ளன என்றார் மாற்கு.

நவீன ஓவியங்களிலும் வெவ்வேறு பாணி பின்பற்றப்படுவதை பற்றிக் கேட்டோம்,

இது வளர்ச்சிக்கே வழிகோலும் ஒவ்வொருவரின் தனித்தன்மையும் பாதிப்புறாது. மற்றவரின் பாதிப்பில்லாத பட்சத்தில், சிறந்த ஆக்கங்களை எதிர்பார்க்க முடியும். ஒரு ஓவியனை இனங்காண இது உதவும் எனப் பதில் அளித்தார்.

இங்கு, உங்களது படைப்புக்கள் பற்றி எழும் விமர்சனங்களைபற்றிகேட்டபோது.

இது ஓர் பயனற்ற வேலை இது மொடேண் ஆர்ட் அல்ல மோடன் ஆர்ட் என்றோரும் உண்டு. இதனால் எனக்கு எந்த விதப் பாதிப்பும் இல்லை. இந்த விமர்சனம் என்னை வளரச் செய்திருக்கிறது. இன்னும் நன்றாகச் செய்ய வேண்டும் என்ற ஊக்கத்தைத் தந்திருக்கிறது எனத் தெரிவித்தார் மாற்கு. இறுதியாக நவீன, ஓவியமரபின் வளர்ச்சிக்கு உங்களது ஆலோசனைகள் என்ன என்றோம்.

இங்கு, மக்களிடம் இந்த மரபு கொண்டு செல்லப்படவேண்டும் கண்காட்சிகள் நடாத்தப்பட வேண்டும் நவீன மரபின், உள்ளார்ந்த தன்மையை, உணர்வு வெளிப்பாட்டை இளையோர் கற்க முயல வேண்டும் எனத் தெரிவித்தார் அல்போன்ஸஸ் மாற்கு.

அவரது உணர்வைப் புரிந்தவாறு, மாற்குவிடமிருந்து விடைபெற்றோம்.

# யாழ். ஸ்ரீதரில்

விடுதலைப்புலிகளின் நிதர்சனத்தின் மற்றுமோர் சிறப்பு வெளியீடான

உயிராயுதம்

★ **உயிராயுதம்** ★

## உயிராயுதம்

# ★ உயிராயுதம் ★

## உயிராயுதம்

★ **உயிராயுதம்** ★

உயிராயுதம்

(வண்ணத் தொகுப்பு)

## நவீன ஆயுதங்களெல்லாம் தோற்றுப் போகும் இந்த உயிராயுதத்தின் முன்னால்!

இது தேசத்தைக்காத்த கரும்புலி வீரர்களின் காவியம்! விடுதலைப் போராட்டத்தில் இதுவரை தமிழீழ மக்களின் விடிவிற்காகவும், மண் விடுதலைக்காகவும் குண்டுடன் சென்று தாமே குண்டாகி எதிரியின் நிலைகளை அழித்து போராட்டத்தை வளர்த்து மக்களைக்காத்த 27 கரும்புலிகளின் காட்சிகள், நேர்காணல், உரையாடல், கைகாட்டிச் சென்று எதிரியை அழிக்கும் இறுதிக் கணம் வரை.. —

**இதுவரை நீங்கள் கண்டிராத அற்புதக் காட்சிகள், கேட்டிராத செய்திகள், சாதனைகள், தியாகங்கள் உங்களுக்காக...**

**மெய்சிலிர்க்கும் உண்மைச் சம்பவங்களைக் காணத்தவறாதீர்கள்**

**தினசரி மாலை 4-00 மணிக்கு**

நுழைவுச்சீட்டு ஏமாற்றத்தை தவிர்க்க முன்கூட்டியே வாருங்கள்

# JURASSIC PARK

**தினசரி: 6. 00 மணி, சனி, ஞாயிறு: காலை 10. 30, மாலை 6. 00 மணி**

# மே 94' ஒளிவீச்சு

**சனி, ஞாயிறு: பி. ப. 2. 30 மணிக்கு காண்பிக்கப்படும்.**

(சி-9779)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# காமினி பொன்சேகா சு. க வில் சேர்ந்தார்

ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் ஊழல் மற்றும் லஞ்சம் வாங்குதல் போன்றன அதிகரித்து வருவதை யடுத்து தான் அக்கட்சியிலிருந்து விலகி முக்கிய எதிர்க் கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்வதாக பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா அறிவித்துள்ளார்.

மேலும் ஆளும் ஐ-தே-கட்சியில் நடந்துள்ள ஊழல்கள் குறித்து உடனடி விசாரணை செய்யப்படல் வேண்டும் எனவும் இது குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கென குழு ஒன்று நியமிக்கப்படல் வேண்டும் எனவும் தான் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி டி- பி- விஜேதுங்க நிராகரித்துவிட்டதாகவும் அவர் கூறியுள்ளார். ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைப் பீடத்துடன் கருத்து வேறுபாடு இருப்பதாகக் கூறி அமைச்சர் எஸ்- செல்லச்சாமி தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

**பாராளுமன்ற**

பட்டியலில் இடம் பெறும் ஆவலில் சிலர் கருத்துக்களை தெரிவிக்க மறுத்த போது மறைமுக எதிர்ப்பைக்காட்டினார்கள். எதிர்வரும் தேர்தல் பட்டியலில் தனது பெயர் வராது என எண்ணும் உறுப்பினர்கள் இத் தீர்மானத்தை வன்மையாக கண்டித்தனர். இது ஐ.தே. கவின் பாராளுமன்ற ஆட்சிக்கு தற்கொலைக்கு ஒத்த செயல் என்று கூட ஜனாதிபதியை திட்டித் தீர்த்தனர். பாராளுமன்ற உறுப்பினர்களான அசோக வடிகமங்காவவும், லால் கமகேயும் மிகவும் ஆவேச முற்றவர்களாக காணப்பட்டனர்.

மத்திய மாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ரேணுகா ஹேரத் மட்டும் எந்த கருத்தையும் தெரிவிக்காது மௌனம் காத்தார். அமைச்சரவைக் கூட்டத்தின் பின்பும், ஜனாதிபதியின் செயலாளர் கே. எச். ஜே. விஜேதாசாவையும் சந்தித்த பின்பும் இது பற்றி தெளிவாக்க விரும்புவதாகக் கூறி ஒதுங்கி கொண்டார். ஆனால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது என்ற செய்தி பிரகடனமாகிவிட்டது.

இதனைத் தொடர்ந்து சிலர் ஜனாதிபதியை சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர். சிலர் ஒதுங்கிக்கொண்ட தோரணையில் நடந்துகொண்டனர். மேலும் சிலர் எதிர்க்கட்சித் தரப்பினருடன் மிகவும் அந்நியோன்னியமாக இது பற்றி விவாதித்தமை போன்ற நிகழ்வுகளும் நடைபெற்றன.

இதே சமயம் சிறிலங்காவின் பத்தாவது பாராளுமன்றம் எப்படி அமையப் போகின்றது? இதில் பழைய முகங்கள் மீண்டும் வருமா? புதியமுகங்கள் வருமா? ஆட்சி யாருக்கு என்றவினாக்களுக்கு சிறிலங்கா மக்கள்தான் விடையளிக்க ஆவலுடன் இருக்கின்றார்கள். இதே வேளை பல வேறு கட்சிகள் கூட்டுச்சேர்ந்து கொள்ளவும், இதற்கான பேரம் பேசும் நிலை கூட தற்போது உருவாகி உள்ளது.

இதோ ஓர் அதிரடிச் செய்தி
ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா வழங்கும்
தோழமையுள்ள வெகுமதி
காவிச் செல்லும் உணவுப் பொட்டலங்கள்
07-07-94 முதல்
ரூபா 27.50 மட்டுமே
இறைச்சி / மீன் / மரக்கறி
எதுவானாலும்
பகல் 11.45 முதல் பிற்பகல் 3.45 வரை
எமது இனிய வாடிக்கையாளர்களுக்கு ஓர் மின்னல் அதிரடி
ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்
ஒழுங்கை,
சுண்டுக்குளி.
உணவுத் தயாரிப்பில் அபார சாதனை
ஜெசித்தாரா
எமக்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை.
(சி-9776)

## விபத்தில் நால்வர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்பருத்தித்துறை வீதியில் கடந்த 5 ஆம் திகதி மாலை நடைபெற்ற வாகன விபத்தில் நால்வர் காயமடைந்து யாழ்போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை புத்தூர் சந்திக்கு அருகாமையில் நடைபெற்ற இவ் விபத்தில் தம்பு பரம்சோதி நாதன் (வயது30) தம்பு சின்னராசா (வயது25) பொ. நகுலேஸ்வரன் (வயது24) பொ. வனிதாதேவி (வயது19) ஆகியோரே காயமடைந்தனர்.

## மீனவர் மீதான தாக்குதல் முற்றாக நிறுத்த முடியாது

### இலங்கை தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய மீனவர் பிரச்சினையை முற்றாக ஒழிப்போம் என எம்மால் கூற முடியாது ஆனால் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாது தடுப்பதற்கு எங்களால் இயன்றளவு முயன்று வருகிறோம் என்று இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுகின்ற சம்பவம் குறித்து அவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது குறித்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது மீனவர்கள் சுடப்படும் நிலையை எங்கள் நிலையில் எவராலும் மறுக்க முடியாது. பல மீனவர்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்பதையும் கடத்தல்காரர் என்பதையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். போதியளவு எச்சரிக்கை செய்த பின்னரே சுடப்பட வேண்டும் என இலங்கை அரசு, இலங்கை கடற்படைக்கு பணிப்புரை வழங்கியுள்ளது. கண்மூடித்தனமான முறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டால் அது இந்திய மீனவருக்கு எதிராகச் செய்யப்பட்டதல்ல. சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய படகுகள் மீதே அப்படி துப்பாக்கிச் சூடு நடத்தப்படுகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை ஒப்பந்த அடிப்படையிலேயே இந்தியா கச்சதீவை இலங்கையிடம் ஒப்படைத்தது. இதனை மீறுவது சர்வதேசசட்டத்தை மீறுவதாகும் என்றார்

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 - 07 - 08**
**வெள்ளி இரவு**

8.01-கலைமஞ்சரி-நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாவது ''ஒகனடா'' எனும் நாவல்.அதனையடுத்து சிறுகதை- ''நிலவல்லஅவள் நெருப்பு'' சிறுகதையை அடுத்து கவிதைகள்.
1. ''உண்மை''
2. ''கரும்புலி''
8.30 - செய்திகள்
8.40 - அரசியல் அரங்கம் ''சுடுகு சிறிது ஆனால் காரம் பெரிது''
8.50-வாத்திய கானங்கள்

**1994 - 07 - 09**
**சனி காலை**

7.02 - மாவீரவணக்கம்
7.15 - நீங்கள் கேட்டவை
7.30- செய்திகள்
7.35 - பத்திரிகைச் செய்திகள்
7. 40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### கொழும்பு

துள்ள இல் ஆதீனக் காரியாலயமும் விடும் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிமுதல் 5.30 மணிவரை மூன்று மணி நேரத்திற்கும் மேலாக கடும் சோதனைக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

### ஷெல்லை

காயங்களுக்குள்ளானார். இவரது விரல் ஒன்று சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளது. மற்றும் இவருடன் நின்ற ராசா (வயது 13) என்பவரும் காயமடைந்தார்.

### அடகுக் கடன்

செயற்படத் தொடங்கி உள்ளதும் தமிழீழ மக்களைப் பொறுத்தவரை பெருமளவில் நல்கு வதாக வேயிருக்குமென்று எல்லோரும் மகிழ்ச்சியோடு எதிர்பார்க்கின்றனர்.

தமிழீழ மக்களின் பொருண்மிய வாழ்வைப் புதுக்கிச் சீராக்கும் வைப்பகத்தின் பல்வேறு திட்டங்களின் இனிய தொடக்கமாகவே இந்த 'அடகுக் கடன்' திட்டம் அறிமுகமாகியுள்ளது. இதனால் பெருமளவு மக்கள் பயன்நுகர்வரென எதிர்பார்க்கப் படுகின்றது. முன்னைய காலங்களில் அடகு வைத்ததினால் ஏமாற்றத்துக்குள்ளாகி இழப்புக்களையடைந்த மக்கள், தங்கள் தங்க உடைமைகளைத் தங்களது வைப்பகத்திலேயே அடகு வைத்துப் பயன்பெறு வதனால், ஏமாற்றம், இழப்பு என்பன எதிர் காலத்தில் நிகழாதென்பதும், தொழில் வளம்பெருக்கிப் பொருண்மியத் தேவைகள் நிறைவேற மென்பதும் இத்தத் திட்டத்தின் குறிப்பிடக்கூடிய நிலைகளாகும். மேலும் விளக்கங்கள் வேண்டுவோரைத் தமிழ் வைப்பகம் தமது பணிமனைக்கு வருமாறு அழைப்பு விடுகின்றது.

# க.பொ.த. உயர்தரப் பரீட்சை பிற்போடப்படலாம்

(கொழும்பு)

க. பொ. த. உயர்தரப் பரீட்சை பொதுத் தேர்தல் முடிந்த பின் நடத்துவது குறித்து மீண்டும் ஆராயப்படுவதாகவும் இவ்வார இறுதிக்குள் இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் நடைபெறவுள்ள வேளையில் பரீட்சையை நடாத்துவது சாத்தியமற்றது எனவும் தேர்தலுக்காக பாடசாலைகள் பொறுப்பேற்கப்படவிருப்பதாகவும் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாம்.

மேலும் ஆவணி முதலாம் திகதி இரண்டாம் தவணை விடுமுறைக்காக பாடசாலைகளை மூடாது அவற்றை ஆவணி 12ஆம் திகதி மூடவும் திட்டமிடப்பட்டுள்ளதாம். அப்படியானால் மட்டுமே பரீட்சையை செப்ரெம்பர் நடுப்பகுதி வரை நடாத்த முடியும் எனவும் சம்பந்தப்பட்டவர்கள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

## தாண்டிக்குளம் ஊடாகவே குண்டு சென்றதாம்

(கொழும்பு)

கொழும்பில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட குண்டுகள் தாண்டிக்குளம் ஊடாகவே லொறியொன்றிற்குள் மறைத்து வைத்துக் கொண்டு வரப்பட்டதாக கைது செய்யப்பட்ட ஒருவர் தெரிவித்ததாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேலும் லொறியின் சாரதி உட்காரும் பகுதியில் இக் குண்டுகள் மறைத்து வைக்கப்பட்டதாகவும் தடை முகாம் களில் தீவிர சோதனைக்கு லொறி உட்பட்ட போது அவற்றைக் கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைக் குட்படுத்தப் பட்டுள்ள நபர் இக் குண்டு கொண்டுவரப்பட்ட லொறியின் இலக்கம் 2801என தெரிவித்துள்ளாராம்.

## உணவு விநியோகத்தில் அதிகாரிகள் ஊழல்

(கொழும்பு)

கொழும்பில் சிறிலங்கா அரச அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கான கப்பல் மூலமான உணவு விநியோகத்தில் ஊழல்புரிகிறார்கள் என தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணத்திற்கான கப்பல் மூலமான உணவு விநியோகம் சிறிலங்கா புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சின்கீழ் உள்ளது. அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் இத்தகவல்களுக்கு பொறுப்பாகவுள்ளார்

கப்பல்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி அறிவித்தல்கள் விடுக்கப்படவில்லைஎன்றும்,அரச அதிகாரிகள் கேள்வி அறிவித்தல் விடுப்பதை திட்டமிட்டு தடுத்தனர் எனவும் தெரியவந்துள்ளது. நாளொன்றுக்கு 3000 அமெரிக்கடொலர்களுக்குமேல் கப்பல் ஒன்றிற்கு வாடகை வழங்கப்படுகிறது- ஆனால் 2400 டொலர் வாடகைக்கு பணமாகபெற்று கப்பல்சேவையை நடாத்த பல கப்பல் நிறுவனங்கள் தயாராக இருந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது- இதன்மூலம் வருடம் ஒன்றிற்கு 40 மில்லியன் ரூபா கையாடப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது-

### ஜனாதிபதி

பதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை கே.எச்.ஜே. விஜேதாச முன்னாள் எதிர்க்கட்சி அரசியல் வாதிகளை சில திணைக்களங்களுக்கு வரவழைத்து பேச்சுவார்த்தை நடத்தியதாக தெரியவந்ததைத் தொடர்ந்து இந்நடவடிக்கை ஜனாதிபதியினால் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டதாக தெரியவருகின்றது.

### கப்பல்

இக் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முதல் தடவையாக இம்முறையே காங்கேசன்துறையில் படையினரால் சோதனை செய்யப்பட்டது. (யோ)

### தேர்தலை

தின் இவ்வாறான நடவடிக்கைக்கு காரணம் தேர்தல் காலங்களில் வன்முறைகளை ஏற்படுத்தவே என்றும் அவ்வாறு ஒரு நிலை ஏற்பட்டால் மக்கள் அதற்கு தகுந்த பாடத்தைகற்பிப்பார்கள் என்றும் தெரிவித்தார்.

### வடக்கிலிருந்து

னை மதவாச்சியிலிருந்துநடாத்த திட்டமிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே சிறிலங்கா அரசின் தேர்தல் அறிவிப்பைத் தொடர்ந்து வவுனியா, தாண்டிக்குளம் சிறிலங்காப் படை சோதனைச் சாவடிகளில் சோதனைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. இளைஞர்கள், யுவதிகள் நீண்ட நேரம் தடுத்து வைக்கப்பட்டு சோதனையிடப் படுகின்றனர்

## சிறிமா போட்டியிடார்

(கொழும்பு)

சிறிமாவோ பண்டாரநாயக்கா, அநுருத்த ரத்வத்த, தீ.மு. ஜயரத்ன, தர்மசிறி சேனநாயக்கா ஆகியோர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட மாட்டார்கள் என தெரியவந்துள்ளது. இதே வேளை இவர்கள் தேசியப்பட்டியல்மூலம்பாராளுமன்றத்திற்கு செல்வதையே விரும்புவதாகவும் மேலும் தெரியவந்துள்ளது.

### வருமானம்

ணெண்ணெய் வழங்குவது தொடர்பாக ஆலோசனை செய்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### வடபகுதி

படையைச்சார்ந்த பல உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இதன்போது வடக்கே தற்போது நடைபெறும் இராணுவ நடவடிக்கை தொடர்பாக இராணுவத்தின் நிலைப்பாடு என்ன? என்று பத்திரிகையாளர் இராணுவத் தளபதியிடம் கேட்டபோது யுத்தம் தொடர்பாக பின்னர் பார்ப்போம் என விடையளித்தார்.

இதே வேளை இராணுவ தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம பத்திரிகையாளரிடம் தெரிவிக்கையில் எமது இராணுவம் யுத்தத்தில் வெற்றிபெற முடியும் என்றும் இருந்த போதும் இன்று அதனைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் எப்படி இருந்தாலும் இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே சிறந்தது எனவும் தெரிவித்தார்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# புளொட் ஆயுதக்குழுவினரின் ஆயுதங்களை களையவேண்டும்

## ராஜமனோகரி புலேந்திரன் வற்புறுத்து

(வவுனியா)

வவுனியாவிலிருந்துபுளொட் ஆயுதக் குழுவினரை வெளியேற்ற வேண்டும் அல்லது அவர்களது ஆயுதங்களைக் களைய வேண்டும் என கல்வி இராஜாங்கஅமைச்சர் இராஜமனோகரி புலேந்திரன் கோரியுள்ளதாக தெரிய வருகிறது.

புளொட் குழுவினரின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டும் இல்லையேல் வவுனியாவிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு ஆயுதங்களைத தர வேண்டும் என இவர் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிடம் மேலும் கேட்டுள்ளார்.

ஐ தே. கட்சி மகாநாடொன்றில் அதன்செயலாளர் காமினி விஜேசேகராவும், இத் தமிழ் இயக்கங்கள் அரசின் தயவில் நின்றுகொண்டு, அரசு தமிழர்களுக்கெதிரானது எனப் பேசுகின்றனர் எனவும் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஐந்து புளொட் உறுப்பினர் நீதிமன்றத்தில் ஆஜர்

## சமூக விரோத குற்றச்சாட்டு

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் கொலை, கொள்ளை, தீவைப்புச் சம்பவங்களில் கைது செய்யப்பட்ட ஐந்து புளொட் உறுப்பினர்கள் கொழும்பு மாவட்ட மேலதிக நீதவானினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த ஐந்து சந்தேக நபர்களையும் மன்னார் நீதவானின் முன் ஆஜர் செய்ய முடியாமலிருக்கிறது என அரசாங்க வழக்கறிஞர் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டம் நீங்கினும்

# பயங்கரவாத தடைச்சட்டம் மாற்றம் ஏதும் இராது

(கொழும்பு)

அவசரகாலச்சட்டம் ஜூலை 15 உடன் நீக்கப்பட்டாலும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் நிலையில் மாற்றமிருக்காது எனத் தெரியவருகிறது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருப்போர் தொடர்பான விசாரணைகள் ஜூலை 15க்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டு அவர்களுக்கெதிரான வழக்கு இருநதால் வழக்குத் தொடரப்படும். ஏனையோர் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் தெரியவருகின்றது.

கடந்த மாதம் நீடிக்கப்பட்ட அவசரகாலச் சட்டம் பாராளுமன்றம் கலைக்கப்பட்டமையால் தொடர்ந்து அவசரகாலச்சட்டத்தை நீடிக்க முடியாத நிலை ஏற்பட்டமை தெரிந்ததே.

# அவசரகாலச் சட்டம் தொடர்ந்து அமுலாகும்

அவசர காலச் சட்டம் தேர்தல் காலத்தின் போது முலில் இருக்கும் எனவும் பின்னர் தொடர்ந்து அமுலில் இருக்கும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

வடக்கு கிழக்கின் நிலைமையில்மாற்றம்எதுவும்ஏற்படாத நிலையில் அவசரகாலச்சட்டம் நீக்கப்பட மாட்டாது எனத் தெரிவித்தார்.

# ரணில் கொழும்பில்; காமினி கண்டியில் போட்டி

கொழும்பு மாவட்ட ஐ தே. க பிரதான வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்காவும், கம்பகாவில் விஜேபால மென்டிசும், கண்டியில் காமினி திசாநாயக்காவும், அனுராதபுரத்தில் எம்.எஸ்.அபரசிறியும் பொலநறுவையில் ருக்மன் சேனநாயக்காவும் போட்டியிடவுள்ளனர்.

சுதந்திரக் கட்சியிலிருந்து ஐ தே.கவுக்கு கட்சி மாறிய திலக்கருணாரட்ண, ஐ தே.கவின் பிரதான வேட்பாளராக களுத்துறையில் போட்டியிடுகின்றார்.

# வடக்கு - கிழக்கு இணைப்பு சு.க. என்றும் எதிர்க்கும்

## சிறிமாவோ தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைவதை சுதந்திரக் கட்சி வன்மையாக எதிர்க்கும் என்றும் இது தொடர்பாக தமது தெளிவான கொள்கை என்றும் மாறாது என்றும் சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

'லக்திவ' பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியிலேயே மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; சகல பகுதிகளில் வாழும் தமிழ்-முஸ்லிம் மக்களின் பிரதேச நலன்கள் பாதுகாக்கப்படும் என உறுதி அளித்துள்ளார்.

# கணித விஞ்ஞான போட்டி

மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படவுள்ள கணித விஞ்ஞான வினாவிடைப் போட்டி நாளை (09-7-1994) சனிக்கிழமை காலை 9-00மணிக்கு யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறும். வயமட்டப் போட்டிகளில் ஒவ்வொரு ஆண்டுப்பிரிவிலும் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற போட்டியாளர்கள் மேற்படி போட்டியில் பங்குகொள்வர் எனக்கல்விப் பணிப்பாளர்கள் அறிவிக்கின்றனர்.

# மூன்றிலிரண்டு ஆசனங்கள் எக்கட்சிக்கும் கிட்டாது

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியும் அதனுடன் தொடர்புடைய கட்சிகளும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் 110 ஆசனங்களை கைப்பற்றும் எனவும் ஐக்கிய தேசிய கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் 98 ஆசனங்களை கைப்பற்றும் என்றும் கருத்துக் கணிப்பீடுகள் காட்டுவதாக கூறப்படுகிறது.

எனவே அரசியலமைப்பில் மாற்றத்தை கொண்டுவருவதற்கு தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஒருவருக்கும் கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறு இல்லை என்றும் தெரியவருகிறது அதற்கு தேவையான மூன்றில் இரண்டு அங்கத்துவத்திற்கு 150 ஆசனங்கள் தேவைப் படுவதாக தெரியவருகிறது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களை பெறுவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி முழு அளவில் முயற்சியில் ஈடுபடுவதாக தெரியவந்துள்ளது.

# தேர்தல் பிரசாரத்தில் கூரே கலந்துகொள்ளார்

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின்போது கட்சியின் பொதுக் கூட்டங்களில் முன்னாள ஐ தே கவின் பொதுச் செயலாளர் சிறிசேனகூரே கலந்துகொள்ள மாட்டார் என அவரது ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தான் பிரதிநிதித்துவம் செய்த கொழும்பு மத்திய தொகுதியில் விரும்பத்தகாதவர்கள் போட்டியிடுவதினால் இவர் இம்முடிவுக்கு வந்துள்ளார் என தெரியவருகின்றது.

# கிறனைட் வெடிப்பு

(கொழும்பு)

கொழும்பில் கிறனைட் வெடிப்பொன்று இடம்பெற்றுள்ளது நேறறு முன்தினம் இடம்பெற்ற இக்குண்டு வெடிப்பில் இதனை எடுத்துச் சென்றவர் படுகாயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

# கோர பஸ்விபத்தில் 95 பேர் காயம்

(கொழும்பு)

இரத்தினபுரி பகுதியில் நேற்று நடைபெற்ற பஸ் விபத்தில் 95 பேர் காயமடைந்ததாகவும் இதில் 25 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காயமடைந்தவர்கள் எலியகொட ஆஸ்பத்திரியிலும், இரத்தினபுரி ஆஸ்பத்திரியி

# பாராளுமன்ற உறுப்பினர் சிலருக்கு வாய்ப்பில்லை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் சென்ற நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாயிருந்த சிலருக்கு. மீளவும் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்படவில்லை. எச். ஆர். பியசிறி, தயானந்த விக்கிரமசிங்க, மதுபாலா எதிரிவீர ஆகியோரும் இம்முறை வேட்பாளர் பட்டியலில் இடம்பெற

கம தொகுதியிலேயேபோட்டியிடுகின்றார். ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் லலித் பிரிவுத் தலைவரான சிறிமானி அத்துலத் முதலி கொழும்பில் பொதுஜன ஐக்கிய முன்னணி பட்டியலில் போட்டியிடுகின்றார்.

அமைச்சரவையின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான விஜேபால மென்டிஸ் கம்பகா மாவட்டத்தில் ஐ தே. க.

# கொழும்பு நகரப் பகுதியில் ஜே.வி.பியின் சுவரொட்டி

(கொழும்பு)

கொழும்பு நகரின் பெரும்பாலான பகுதிகளில் சென்ற வாரம் ஜே.வி.பி பெயரிலான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

சுதந்திரக் கட்சி பதவிக்கு வருமேயானால் சுதந்திர பொருளாதாரக் கொள்கையைத் தொடர அனுமதிக்கப் போவதில்லையென அச் சுவரொட்டிகளில் வாசகங்கள் காணப்பட்டன.

வெற்றிக்கிண்ணம் யாருக்கு

வித்துள்ளன.

காயமடைந்தவர்கள் எலிய கொட ஆஸ்பத்திரியிலும், இரத்தினபுரி ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ள தாக மேலும் தெரியவருகின்றது.

தயானந்த விக்கிரமசிங்க, மதுறுபாலா எதிரிவீர ஆகியோரும் இம்முறை வேட்பாளர் பட்டியலில் இடம்பெறவில்லை.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் இம் முறையும் மகர

அமைச்சரவையின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான விஜேபால மென்டிஸ் கம்பகா மாவட்டத்தில் ஐ. தே. க. பட்டியலில் போட்டியிடுகின்றார்.

இதேவேளை பல சிரேஷ்ட அமைச்சர்கள், தேசியப் பட்டியலிலேயே பாராளுமன்ற ஆசனம் பெற கோரியுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை அமைச்சர்கள் பலரும் இம்முறை விலகியுள்ளனர். புடைவைக் கைத்தொழில் அமைச்சர் யூ. பி. விஜேகோன், காலி மாவட்ட உறுப்பினர் புத்திக குருகுலரத்ன ஆகியோரும் போட்டியிடப் போவதில்லை என அறிவித்துள்ளனர்.

சுதந்திரக் கட்சி பதவிக்கு


பிந்திய செய்தி!

## ஜோ. எகட்டனின்

# ஜெசித்தாரா

### வழங்கும் முதன்மைச் சேவைகள்

உங்களுக்குத் தேவையான உணவுப் பொட்டலங்களை உங்கள்எண்ணத்துக்கேற்பவும். பணத்திற்கேற்பவும் வடிவமைத்துத் தருவோம். நீங்கள் இதுவென்று குறிப்பிடுங்கள் நாங்கள் முடித்து வைப்போம். அத்துடன் மட்டுமல்லாமல் வெளிநாட்டில் பயிற்சி பெற்ற சமையல் நிபுணர்களின் ஆலோசனைக்கேற்ப மேலைத்தேய, கீழைத்தேய உணவுவகைகள், சிற்றுண்டி வகைகள் மற்றும் உங்கள் மங்கள நிகழ்வுகள் கொண்டாட்டங்கள், விழாக்கள் பிரியாவிடை உபசாரங்கள் மற்றும் நிகழ்வுகளுக்கு இலவச மண்டப வசதியுடன் உணவு பரிமாறு சேவை மற்றும் பல விடரங்களுக்கு எமது முகாமையாளரைச் சந்தியுங்கள்.

## ஜோ. எகட்டனின்

# ஜெசித்தாரா

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி

(எமக்கு வேறு கிளைகள் இல்லை)

(சி-9777)


## மின்னொளியில் கூடைப்பந்தாட்டம்

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்படும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று மாலை யாழ் பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறும். இன்றைய ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளாவன:

மாலை 5. 30: சென்றலைட் சொக்ஸ் அணி எதிர் யாழ். பல்கலைக் கழக 'B'

மாலை 6. 30: யாழ். பல்கலைக் கழக பெண்கள் அணி எதிர் குருநகர் விளையாட்டு கழக பெண்கள் அணி

மாலை 7. 30: யாழ். பல்கலைக் கழக 'A' அணி எதிர் பற்றீசியன்ஸ் கோல்ட் அணி.


# வெற்றிக்கிண்ணம் யாருக்கு

'94 உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறப் போகும் அணிகளை வரிசைக் கிரமமாகத் தெரிவு செய்து பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஒருவர் எத்தனை விண்ணப்பங்களையும் அனுப்பலாம். விண்ணப்பங்கள் பிரசுரமாகியுள்ள விண்ணப்பப்படிவத்தில் அனுப்பப்பட வேண்டும். பரிசு பெறுவோர் குலுக்கல் முறைமூலம் தெரிவு செய்யப்படுவர்.

முதலாம் பரிசு 500 ரூபா
இரண்டாம் பரிசு 300 ரூபா
மூன்றாம் பரிசு 200 ரூபா

9-7-94 அன்று பிற்பகல் 4 மணிக்கு முன்னர் விண்ணப்பங்கள் தபால் மூலமோ அல்லது நேரிலோ கிடைக்கத்தக்கதாக அனுப்ப வேண்டும்.

முகவரி;
உலகக்கிண்ண உதைபந்தாட்டம் '94
ஈழநாதம் காரியாலயம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

---

## வெற்றிக் கிண்ணம் யாருக்கு?

உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி '94

1-ம் இடம்: ....................
2-ம் இடம்: ....................
3-ம் இடம்: ....................

பெயர்: ........................................
விலாசம்: ........................................
கையொப்பம்: ........................................



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 08 ஆம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.